# ஞானபோதினி.

ஸம்புடம். IV. } 1900௵ அக்டோபர்௴ 20௳ { புத்தகம். 3

## பாரத ஸாரம்.

### அத்தியாயம். II. (ஆதிபருவம்.)
### (பாரத வீரர்களின் இளமைப்பருவம்.)

(52 - ஆம் பக்கத் தொடர்ச்சி.)

"நீடாழி யுலகத்து மறைநாலொ டைந்தென்று நிலைநிற்கவே
வாடாத தவவாய்மை முனிராசன் மாபார தஞ்சொன்னநா
ளேடாக மாமேரு வெற்பாக வங்கூரெ ழுத்தாணிதன்
கோடாக வெழுதும்பி ரானைப்ப ணிந்தன்பு கூர்வாமரோ"

"அருமறை முதல்வனை யாழி மாயனைக்
கருமுகில் வண்ணனைக் கமலக் கண்ணனைத்
திருமகள் தலைவனைத் தேவ தேவனை
யிருபத முளரிக ளிறைஞ்சி யேத்துவாம்"

குருவம்சத்துப் பிள்ளைகள் ஒற்றுமையின்றி ஒருவரோடொருவர் சச்சரவு பண்ணிக்கொண்டு வீணிற் காலங்கழிக்கிறதை அரசன்கண்டு, அவர்களுக்குரிய ஆயுதப்பயிற்சி முதலியன கற்பிக்கும்பொருட்டுக் கிருபாசாரியரிடம் அவர்களை ஒப்பித்தான். அவர்கள் இவரிடம் சிலகாலம் வரையில் ஆயுதப்பயிற்சி செய்துகொண்டு வந்தார்கள். அக்காலத்துக் கிருபரில்லத்துத் துரோணாசாரியார் என்னும் பெயர்பூண்ட பிராமணோத்தமர் ஒருவர் வந்திருந்தார். இவர் கிருபாசாரியருடைய தங்கையாகிய கிருபியின் புருஷர். பரத்வாஜர் என்னு முனிபுங்கவருடைய புத்திரர். பாஞ்சால தேசாதிபதியாகிய பிரிஷதர் என்னுமரசன் புத்திரனாகிய துருபதனுடன்

தாமும் தம் தகப்பனரிடம் ஒன்றாய் அஸ்திர சஸ்திராப்பியாசஞ் செய்துதேர்ந்தவர். துரோணர் இதற்கு மேலும் பிருகு முனிவர் புத்திரரிடம் இக்கலையைக் கற்றதுமன்றி அவரிடமிருந்து அநேக அஸ்திர சஸ்திரங்களையும் பெற்று அவற்றைப் பிரயோகஞ்செய்யும் முறையையும் நன்றாயறிந்தவர். பிறகுயாதோ ஒரு காரியார்த்தமாய் அப்பொழுது பாஞ்சாலதேசத்திற்கு அரசனாயும் முன்னொருகால் தன் சகபாடியாயு மிருந்த துருபதனைப் பார்க்கும்பொருட்டு அவனரண்மனைக்குட் சென்று தான் தன் ஸ்நேகிதனைப்பார்க்க வந்திருப்பதாக அவனுக்குத் தெரிவிக்கும்படி சொன்னார். இவ்விஷயங்காதிற் பட்டதும் துருபதன் விஷஜெந்துவைப்போற் சீறி, பணச் செருக்கினால், வந்தவனைக் கோபக்குறியாற் சற்றுக் கடுகடுப்புடன் பார்த்து "ஏழைகளுடன் அரசர்கள் ஸ்நேகமுஞ் செய்வார்களோ? ஒருவன்தானரசனா யில்லாவிடில் அரசருடன் எப்படி ஸ்நேகம் செய்யத்தக்க அந்தஸ்துக்குவரக்கூடும்?'' என்று துரோணருடன் போய்ச்சொல்லும்படி அவரிடமிருந்து வந்தவனைத் திருப்பியனுப்பி விட்டான். "தொன்மை மறவேல்'' என்பதையும் அடியோடே அலக்ஷியஞ் செய்துவிட்டான். ஆலோசியாது சொல்லிய அவ்விஷயம் அவனுக்குப் பின்பு அதிக அநர்த்தமாய் முடிந்தது. துரோணர் ஒன்றும் மேற்சொல்லாமல் திரும்பி அஸ்தினபுரிக்கு வந்து தன் மைத்துனனாகிய கிருபருடைய வீட்டில் தங்கியிருந்தார். துப்பாக்கி வயிற்றிற் பீரங்கி பிறந்தாற்போன்று அவர்க்குப்புத்திரராய் உதித்த அசுவத்தாமா அப்போது அரசிளங் குமாரர்களுக்கு வில்வித்தை சற்பித்துவரும் கிருபருக்கு அவ்விஷயத்தில் அதிக உதவி புரிந்துகொண்டு வந்தார். *

ஒருநாள் துரியோதனாதியர் பந்துவிளையாடிக் கொண்டிருந்தபோது அப்பந்து தவறி ஒரு பாழ்ங்கிணற்றில் வீழ்ந்துவிட்டது. அதை யெடுக்க அவர்களி லொருவராலும் முடியவில்லை. அவர்களுடைய உபாத்தியாயராகிய கிருபர்முயன்றும் முடியவில்லை. பந்தாடும் பிள்ளைகள் எல்லாப் பக்கமும் பார்த்துப் பார்த்துப் விழித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் விழிக்கும் விழிப்புக்கு பத்துத்திக்கும் போதாவாயின. அத்தருணத்தில் துரோணர் அந்தப்பக்கமாய்ப் போய்க்கொண்டிருந்தார். அவர்கள் அவஸ்தைப் படுகிற

* ஆதிபருவம் [§ 128, 129, 131, 132.]

தைப்பார்த்து அவர்களை அணுகிச் சங்கதி இன்னதென்று தெரிந்து கொண்டு தன் கையிலுள்ள பவித்திரத்தைக்கையினின்றுங்கழற்றி, பந்து விழுந்திருந்த கிணற்றிலெறிந்து அங்கிருந்த தருப்பைப் புல் லிரண்டொன்று அதன்பிறகு எறியவே அது பந்தை வெளியிற் கொண்டுவந்துவிட்டது. பிறகு ஓர் புல் மோதிரத்தையும் வெளியே கொணர்ந்தது. அதைக்கண்ட பிள்ளைகளனைவரும் அதிக ஆச் சரியமும் ஆனந்தமுமடைந்து அவருக்கு யாதேனும் உதவி புரிய வேண்டுமென்னு மெண்ணமுடையரானார்கள். பிள்ளைகளை அழை த்து "நீங்க ளிதைப்போய்ப் பீஷ்மரிடம் சொன்னாற் போதும். வே றோருதவியும் புரியவேண்டாம்" என்றார் துரோணர். பிள்ளைகள் அதிக குதூகலத்துடன் தம் பிதாமகராகிய பீஷ்மரையடைந்து நடந்த சங்கதியைச் சொன்னார்கள். பிள்ளைகளுக்குத் தக்க ஆசிரியரை அடைய இதுவரையும் விசாரித்துக்கொண்டேயிரு ந்த பீஷ்மர் இந்தச் சங்கதி கேட்டவுடன் இவ்வளவு வல்லவர் துரோணராய்த் தான் இருத்தல் வேண்டுமென்னும் துணிபு கொண்டு கிருபர் இல்லத்திற்கு உடனே அவரை நாடிச் சென்றார். துரோணரும் தன் சரித்திர மெல்லாம் அவர்க்குச் சொல்லி முடித்தார். குருபுத்திரர்களுக்கு ஆசிரியராக வேண்டு மென்று அவரைவேண்டிப் பிள்ளைகளை அதிக ஆனந்தத்துடன் அவரிடம் ஒப்பித்துவிட்டார்.*

குருபுத்திரர்கள் தம் குருவை யடைந்ததும் அவர் இவர்களை நோக்கிக் "குழந்தைகாள்! என்மனதிலோரெண்ணமிருந்து என்னை எப்போதும் சஞ்சலப் படுத்திக்கொண்டே யிருக்கின்றது. நீங்கள் என்னிடம் வில்வித்தை முதலியன பயின்று திறமுடைய வில்லாளிகளானதும் என்னெண்ணத்தை உங்களிலெவரேனும் 'முடிக்கவல்லேன்' என்று சொல்லத் துணிவீர்களா? அஃது உங் கள் விற்றிறத்திலேயே முடிக்கக்கூடியதுதான்" என்று துரோணர் சொன்னதும் மற்றவர் மவுனஞ்சாதிக்கவும் அர்ச்சுனனொருவனே "உமது எண்ணம் எதுவேயாயினும் அதை முடித்துவிட்டுத்தான் மற்றெக்காரியத்தையும் கவனிப்பேன்" என்றான். அர்ச்சுனன் ஆசானிடம் கல்வி பயின்ற காலமெல்லாம் அவராணையைச் சிர மேற்கொண்டு சிறிதேனுந்தாமதமின்றி நடந்து வருவானாயினன்.

* ஆதிபருவம். [§ 133.]

இவனுடைய விசுவாசத்திற்கிணங்கத் துரோணரும் இவனிடத்தில் அதிகபிரியமும் அன்பும் ஆர்வமும் வைத்திருந்தார். ஒருநாளிரவில் அர்ச்சுனன் அன்னமருந்திக் கொண்டிருக்கையில் தீபம் திடீரென்று அவிந்துபோய்விட்டது. ஆயினும் சாப்பிடுவதை நிறுத்தவில்லை. இருட்டாயிருந்தும் பழக்கத்தினுற் கையானது அன்னத்தை அள்ளிவாய்க்குக்கொண்டு கொடுத்துமீள்வதைக்கண்டு சாதக்மே இதற்குக்காரணமெனத் தெரிந்து

"சித்திரமுங் கைப்பழக்கஞ் செந்தமிழு நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்—நித்தம்
நடையு நடைப்பழக்க நட்புந் தயையுங்
கொடையும் பிறவிக் குணம்."

பழக்கத்தினுற் பற்பலபயனையும் அடையலாமென்றிருக்கவே இரவிலும் தான் வில்வித்தை பயில ஆரம்பித்தான. இவனுடைய விடாமுயற்சியையும் புத்திக் கூர்மையையும் ஆசிரியர் கண்டு மிகவும் வியந்தார்.

எவ்வளவு அற்பமான விஷயமாயிருந்தாலும் அதனையும் அர்ச்சுனனைப்போல் ஒருவன் கவனிப்பானுயின் பயனுடையன இன்னவென்பதையும் தேர்ந்து தெளிதல்கூடும்.

துரோணரிடம் அக்காலத்தில் வில்வித்தை கற்கும்பொருட்டு அவரைத்தேடிவந்தவர்களனேகர். ஏகலைவன் என்பவனும் இவர்களிலொருவன். இவன் நிஷதர்களுடைய அரசனது புத்திரன். நிஷதர் வேடுவச்சாதியாரைப் போன்றவொரு ஜாதியார். இவன் இவரிடம்பரிந்து தானிவர்க்குச் சீடனுக வேண்டுமென்று கேட்டும் துரோணர் "அஸ்திர சஸ்திர அப்பியாசத்தில் மந்திரமும் கலந்திருக்கிறபடியால் அவற்றைத் தக்கவருணத்திற் பிறந்தார்க்கு மாத்திரந்தான் உபதேசிக்கக்கூடும். உன்னைப்போன்ற இழிகுலத்தினர்க்கு உபதேசித்தல் கூடாதே, ஆகையால் உனக்கு உபதேசஞ்செய்தல் முடியாது" என்றுசொல்லி அவனை அனுப்பிவிட்டார். ஏகலைவன் சிறிதேனும் கோபங்கொள்ளாது அவரது பாததாமரையைத்தொட்டுக் கண்ணி லொற்றிக்கொண்டு வந்தவழியே திரும்பித் தன்னூடு சென்றுன். பிறகு இவனேர் சிலம்பக்கூடம் தயார்செய்து துரோணரைப்போன்ற ஒருருவமைத்து அவ்வுரு

வையே தனக்குக் குருவாய்க்கொண்டு குருபுத்திரர் கற்றதற்கு மேலும் தான் கொஞ்சக் காலத்திற்குட் கற்றறிந்துவிட்டான். இதற்கு யாதுகாரணம்? தான் குருவினிடத்துவைத்த பக்தியும், தானெடுத்துக்கொண்ட காரியத்தை எவ்விதத்தினும் முடித்தலே கடன் எனக்கொண்ட தனது ஊக்கமும் விடாமுயற்சியு மல்லவா அதிக சீக்கிரத்திற் பஞ்சவரைக்காட்டினு இவன் மிஞ்சினவனாய்ப் போகவேண்டிவந்தது? ஊக்கமும் விடாமுயற்சியும் ஒருவ னெக்காலத்தும் தான் அணியும் ஆபரணமாகக் கொள்ள வேண்டாமா? குருபுத்திரர்கள் வேட்டையாடக் காட்டுக்குச்செல்கையில் அர்ச்சுனனுடைய சுணங்கன் ஏகலைவனுடைய சிலம்பக்கூடத்துட்சென்று துரோண பிம்பத்தை அசுத்தம்செய்ய ஆரம்பிக்க வே ஏகலைவன் கோபங்கொண்டு வில்லெடுத்துக் கணைதொடுத்துவிட்டான். அஃது அந்த நாய்த்தேகத்தில் நாற்புறத்தும் பாய்ந்து வாய் வழியாய் வந்துவிட்டது. அதைப் பொறுக்கமாட்டாது அந்த நாயானது குலைத்துக்கொண்டே தன் எஜமானனைத்தேடித் திரும்பிச் சென்றது. அவன் 'இதன்பேரில் இவ்வற்புதமான பாணப்பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறதே. இது தனக்கும் எனக்கும் தான் தெரியுமென்று துரோணர் சொன்னாரே. அவரிங்கு நம்முடன் வரவில்லையே. வந்தாலும் இதன் பேரில் அப்பாணத்தை எய்யமாட்டாரே. இதை யிவரிடம் கற்றறிந்தவன் வேறொருவன் இங்கு இருக்கத்தான் வேண்டும்' என்று தீர்மானித்து, சுணங்கன் போனவழியே தானும் செல்ல அஃது ஏகலைவனுடைய சிலம்பக்கூடத்தைச்சேர்ந்தது. அதிலிருந்த ஏகலைவன் வெளியில் வந்துபார்க்க அர்ச்சுனனும் அவனைச் சேர்ந்தவர்களும் வரக்கண்டு எதிர்கொண்டு அழைத்துவந்து தக்க உபசாரம் செய்து வித்தியாப்பியாசத்தைப்பற்றி வினவும்போது சுணங்கன் மீது பாணமெய்ததற்குக்காரணமும் அறிந்துகொண்டான் அருச்சுனன். அவனுக்குக்குரு துரோணரென்பதும் அவன் சொல்லக் கேட்டு அவனிடம் செலவு பெற்றுக்கொண்டு எல்லாரும் அரண்மனைக்குத் திரும்பிச்சென்றார்கள். அன்றுமுதல் அர்ச்சுனன் சற்று ஏக்கமுற்றிருக்கிறதைத்துரோணர் அவன்றன்முகக்குறியாலறிந்து அவனை யழைத்து அதற்கு யாதுகாரணமென வினவ, அவன் "தாங்கள் எனக்குமாத்திரம் தான் கற்பித்தேனென்ற ஒரு விசேஷ பா

ணப் பிரயோகம் ஒரு வேடன் தங்களிடம் கற்று அதைப்பிரயோகித்து எனது சுணங்கனைக்கொன்றான்" என்றனன். அதற்கவர் "அந்தச் சிஷனை எனக்குக் காட்டுவாயாக. யான் கற்றுக்கொடுக்கவேயில்லை" என்று உறுதியாய்ச்சொல்லலும் அவரை யிட்டுக்கொண்டு ஏகலைவனுடைய சிலம்பக்கூடம் சென்றான். துரோணர் வருகிறாரென்பதை உணர்ந்து எதிர்கொண்டுசென்று வேண்டிய உபசரணை செய்து அவரை யோராசனத்திருத்தித் தான் கைகட்டி வாய்புதைத்து அவர் முன் நின்றான். அவர் அவனை நோக்கி "நீ இப்பாணப்பிரயோகத்தை எப்படிக்கற்றாய்" யென்றார். அவன் எதிரிலிருந்த பிம்பத்தைச் சுட்டிக்காட்டித் "தங்களுருவாய இச்சிலையினின்றும் கற்றேன்" என்று சொல்லவும், இவன் குருவினிடம் வைத்திருக்கும் விசுவாசத்தையும் பக்தியையும் கண்டு ஆச்சரியமடைந்து அர்ச்சுனனுக்கும் அதைக்காண்பித்து நின்றார். அர்ச்சுனனும் வியந்து வெட்கித் தலைகுனிந்தான். பக்தியிற்சிறந்த சீடனாகிய ஏகலைவன் குருவைப்பார்த்துத் "தங்கள் தயவினால் இவ்வளவு விருத்தியடைந்தேன். குருதக்ஷிணை கொடுக்க விரும்புகிறேன். என்னாலியன்றது எதுவாயினும் தங்கள் விருப்பத்திற்கிணையக் கொடுக்கிறேன்" என்றான். அவர் "மற்றொன்றும் வேண்டாம், உன் வலது கைப்பெருவிரலைக் காணிக்கையாய்த்தா" என்றார். சற்றேனும் வருத்தமென்பதின்றி அகமலர்ச்சி முகமலர்ச்சியோடு அதைத்தறித்துக்குருவிற்குமுன்பாக வைத்தான். குரு இவனுடைய பக்திவிசேஷத்திற்கு மிகவும் வியந்து "இனி ஏகவல்லியனென்பது உன் பெயராகட்டும்: உன்னுடைய பக்திக்கும், ஊக்கத்திற்கும், விடாமுயற்சிக்கும் யாம் மிகவியந்தனம்" என்றுசொல்லி விடைபெற்று அர்ச்சுனனும் துரோணரும் திரும்பி அரண்மனை அடைந்தார்கள்.

இவ்விதமாக வலக்கைப்பெருவிரலீந்தான் ஏகலைவன். வலக்கைப் பெருவிரலில்லாவிடில் ஒருவன் வில்லாளியாயிருந்து யாது பிரயோசனம்? பார்ப்பவர்களுக்கு துரோணர் செய்தகாரியம் மிக்க குரூரமாகத் தோன்றாதா? ஆம்: தோன்றும். ஆயினும் அவர்செய்தது நியாயந்தான். எப்படி? ஒருவன் தன் முற்பிறப்பில்தனக்கிருந்த நல்லெண்ணம் நற்செய்கை இவற்றிற்குத்தக்கவாறு இந்த ஜன்மத்தில் தக்க இடத்தில் தக்ககுண ரூப லாவண்யத்தோடும் பிறக்கிறான்.

நீயெண்ணம் தீச்செயலுடையவனும் அதற்குத்தக்கபடி பிறக்கிறுன். ஒருவன் தேகமும் அவன் பிறந்திருக்கும் வர்ணுச்சிரமமும் தன் பூர்வ கர்மத்திற்குத்தக்கபடிதாம் இருக்கும், இவன் இச்சாதியிற் பிறந்துதனக் குரியனவலாதனவற்றை அடையவிரும்புதல் கூடாதாகலின் தனக்கிக்கதி வரும்படி ஆயிற்று. அப்பலனை அடைவிப்பதற்குத் துரோணர் ஒருகாரணமாக இருந்தார். இஃது இவனுடைய கர்மபலன். இவன் தன் கர்மசேஷம் க்ஷயித்துப்போகிற வரையிற் பொறுத்திருந்தால் எல்லா நன்மையுந் தாமேவந்து இவனைச்சேரும். இவனுக்கு இவ்விஷயத்திற் பொறுமையில்லை. தன்வர்ணத்திற்குத் தகாதென் றேற்பட்டிருந்தனவற்றை யடையத் தன் கையைக்கொண்டு தான் அடைய முயற்சிசெய்தமையால் தன் கைபோகும்படிநேரிட்டது. ஆயினும் அவனுடைய குருவிசுவாசமும், பொறுமையும், ஊக்கமும், விடாமுயற்சியும், வேண்டியவேலை செய்துகொண்டிருந்தன. இவையெல்லாம் இனி இப்பிறப்பினும் பலனடையலாம் என்பதைத்தெற்றென விளக்கின. மறுஜன்மத்திலடையும் பலனுக்கோ ஓரளவில்லை.

ஒருநாள் துரோணர் தம்மாணவர்களைப் பரீக்ஷிக்க எண்ணங்கொண்டு ஒருபக்ஷி பிம்பத்தை "ஒரு மரக்கிளையில்வைத்துத் தம் மாணவர்களை அழைத்து அதனை ஓரம்பெய்து கொல்லுங்கள், பார்ப்போ'மென்ருர். முதலில் தர்மர் தம்கையில் வில்லு மம்பும் எடுத்து நின்ருர். துரோணர் அவருக்கு அப்பக்ஷியைக்காட்டி "அப்பா தர்மா! உன் கண்ணுக்குப்புலப்படுகிறது எது? பக்ஷியா? மரமா, நானு? அல்லது உன் சகோதரர்களா?" என்ருர். அதற்கவர் "எல்லாரும் என்கண்ணுக்குப் புலப்படுகிருர்கள்" என்ருர். "அப்பா தர்மா, ஒதுங்கிநில், குறியையுன்ஞல் அடிக்க முடியாது" என்ருர் துரோணர். அர்ச்சுனன்தவிர மற்றச்சோதரர்களும் தர்மரைப்போன்று ஒதுக்கிவிடப்பட்டார்கள். அதற்குப்பிறகு அர்ச்சுனன் வில்லும் கையுமாக வந்தெதிர் நின்ருன். அவனையும் மற்றவர்களைக்கேட்ட கேள்வியை மறுபடியுங்கேட்டார். இவன் "பக்ஷி மாத்திரம் என் கண்ணுக்குப் புலப்படுகிறதேயன்றி, மரமும் தெரியவில்லை, தாங்களும் தெரியவில்லை" என்ருன். "உனக்குப் பக்ஷிமாத்திரம் தெரியும் பக்ஷத்தில் அஃது எப்படியிருக்கிறது எனக்குக்கொஞ்சம் விளங்கச்சொல்" என்ருர் துரோணர். விஷயங்களை எப்போதும் உற்று நோக்கும்

அர்ச்சுனன் "பக்ஷியின் சிரசு மாத்திரம் தெரிகிறதேயன்றி அத னுடைய மற்ற அவயவங்களுள் யாதேனும் தெரியவில்லையே" யென்றான். துரோணர் அர்ச்சுனனுடைய திறமையைக்கண்டு வியந்து அதிக ஆனந்தமடைந்து "அப்பா அர்ச்சுனா, எடுவில்லை, விடு கணையை" என்றார்.

இதில் அர்ச்சுனன் காட்டிய திறமை என்ன? உற்றுநோக்குந் திறமை. *அஃது ஒவ்வொருவர்க்கு மிருக்கவேண்டியது அதிக ஆவசியகமானது. ஒன்றை இலக்குவைத்துப் பார்க்கும்போது மற்று ஐந்தாறு விஷயங்கள் அதே காலத்தில் நமது கண்ணுக்குப்புலப் படுமானால் நாம் வைத்த குறியை எப்படி அடித்தல்கூடும். எதை முதலிற் கவனிக்க ஆரம்பிக்கிறோமோ அது முடியும் வரையில் நமது கவனம் வேறோரிடத்திலும் செல்லக்கூடாது. சென்றால் முதலுக்கே மோசந்தான். இது விஷயத்தில் தர்மர் முதலிய வரைப்போன்றிராது அர்ச்சுனனைப் போன்றிருத்தல் வேண்டும். இதனை இளஞ்சிறாரேயன்றி வயதின் முதிர்ந்தோரும் அதிகமாய்க் கவனித்து நாடோறும் நடக்கவேண்டுவது அவசியமல்லவா?

அர்ச்சுனன் முதலியவர்களுடைய ஆயுதப்பயிற்சி முதலியன முடிவு பெற்றதும் இவற்றை அரங்கேற்ற ஓர்நாள் ஏற்படுத்தினார் கள். அன்றைத்தினம் அந்நகரத்தாரும் அதைச்சூழ்ந்த நகரிலுள்ள வர்களும் அரண்மனையிலுள்ளார் அனைவரும் ஒருங்கே அரங்கே ற்றுமிடத்தில் வந்துகூடினார்கள். அதற்குத்தக்க ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. குரு புத்திரர்கள் ஒவ்வொருவரும் தம்தம் திறத்தைக்காட்டினார்கள். அர்ச்சுனன் எல்லாரினும் மிக்க திறமை யுடையவனாய்த் தோன்றினான். எல்லாப்பக்கங்களிலும் ஓடும்படி சூத்திரமமைத்த ஓரிரும்புப்பன்றி ஒன்றன்மீது ஓரம்பெய்துவா ட்டி வீழ்த்தியது அவ்விடத்திற் காட்டியஅநேக விநோதக் காட்சிகளிலொன்று. ஏககாலத்தில் தன் வில்லினின்றும் அர்ச்சு னன் ஐந்து அம்பு அப்பன்றியின்மீது எய்தான். அவையனைத்தும் ஒரேகாலத்து அதன் வாயினுழைந்துஐந்துவழியாய் வெளித்தோ ன்றின. இவையெல்லாம் முடிவேறுந்தருணத்தில் அக்கூடாத் தில் ஒரு பெரியசத்தம் கேட்டு எல்லாரும் திடுக்கிட்டு நாற்புற மும் பார்த்தார்கள். அப்போது ஜனங்களை நீக்கிக்கொண்டுவந்து

* Close attention, Concentration.

தோன்றினன் ஒருசிறுவன். ஆயினும் வீரத்திற்பெரியவன். கர்ணன்
என்னும் பெயரினன். அவனும் துரோணருடைய மாணாக்கர்களி
லொருவன். அர்ச்சுனனுடைய திறமையைப்பார்த்துத் தீராப்
பொறாமையுடையவன். அர்ச்சுனன் காண்பித்த எல்லாவிநோத
வேடிக்கைகளைத் தானும் ஒன்றுவிடாமற் காண்பித்து அரங்கி
லுள்ளோர் அனைவரும்ஆநந்தமடையுமாறு செய்தனன். பிறகு உட
னே அர்ச்சுனனுடன் குஸ்திக்கு நின்றான் கன்னன். அப்போது
வழக்கப்பிரகாரம் இருவரிலொருவனாகிய அர்ச்சுனன் பேரும்குல
மும் எடுத்துரைத்தார் கிருபாசாரியர். மற்றவனுடைய குலமும்
கோத்திரமும் விசாரித்தார்கள். கர்ணன் தன் தாய்தந்தையர் இன்
னாரெனத் தெரியாததனால் மயங்கினான். வெட்கத்தினால் தேகம்
வெளுத்தான். இதை மற்றவர்கள் அறியாததற்குமுன் துரியோ
தனன் சரேலென அவ்விடம் வந்து "அர்ச்சுனனுடன் அரசனாயி
ருப்பவன்தான் குஸ்திக்கு வரலாமென நீங்களெல்லோரும் யோசி
க்கும்பக்ஷத்தில் கர்ணனையும் அரசனாக்கிவிடுகிறேன்" என்று சொ
ல்லி உடனே அவனை அங்கதேசத்திற்கு அரசனாக்கினான். அவனும்
இச்சன்றி யறிகுறியாய் "நம்முடைய நண்பு நமன் ஒருவன்தவிர
மற்றெவராலும் மற்றெதனாலும் பிரிக்க முடியாதொழிக" என்று கூ
றிச்சபதம்செய்துகொண்டான். அப்போது தேர்ப்பாகன்ஒருவன்,
வயதின் முதியோன், அவன் தட்டித்தடுமாறி வந்து தானெடுத்து
வளர்த்த பிள்ளையின் திறத்தைக்கண்டு தான் தான் தகப்பனென
எல்லாருக்கும் முன்வந்து நின்றான். கன்னனும் அவன் தாள்ப
ணிந்து அர்ச்சுனனுக்கு முன்வந்து நின்றான். அப்போது
வீமன் கோபத்துடன் கொதித்தெழுந்து கன்னனைத்தேர்ப்பாகன்
பிள்ளையென இகழ்ந்து அவன் அர்ச்சுனனுடன் குஸ்திக்கு
நிற்றல் தகாதென்றுரைத்த மாத்திரத்தில் துரியோதனன் தன்
துணைவன் கர்ணன் பேணாக்காக்கும் பொருட்டுத் திடீரென்று
குதித்தெழுந்து "கர்ணனை அரசனாக்கியும் இப்படி இகழ்வது அநா
மல்லவா?" என்று அங்குநின்றவர்களை உரத்த தொனியுடன்வின
வ ஆரம்பிக்கும்போது கதிரவனும் மேற்குச்சமுத்திரத்து மூழ்கி
னான். வந்தவர்களும் வந்த வழியே பிரிந்தேகினார்கள். வில்வித்
தையில் அர்ச்சுனனைப்பார்க்கிலும் கர்ணன் சிறந்தவனோ? அல்

லது அருச்சுனன்தான் சிறந்தவனோ? என்னு ஐயம் அப்போதுந் தீரவில்லை. இன்றளவும் அதே நிலைமையிற்றானிருக்கிறது.

கல்குளம் - குப்புசாமி முதலியார்.

## கமலினி.

### அத்தியாயம்.—XXII.

"மீளருந் தருமந் தன்னை வெல்லுமோ பாவஞ் சொல்வாய்"

வீரமார்த்தாண்டன் அரண்மனையைவிட்டுச் சென்று சிலகாலமானதும் சுந்தரன் விசயையினை இரகசியமாய்ப் பலாத்காரமாய் இராக்கத மணம்புணர இதுவே நல்லசமயமென்றெண்ணி ஒரு தந்திரஞ் செய்தனன்.

அரசன் குணவதியின் மோகவலையிற்சிக்கி இராசாங்க விஷயங்களையும் சரிவர நடத்தாமல் வீணே காலத்தைக் கழித்தனன். தன் பெண் யுவதித்தன்மை யுற்றதனால் மணஞ்செய்விக்க வேண்டுமென்னும் எண்ணமே அவனிடத்து உற்பவிக்கவில்லை. அவன் கொடுமதி சீக்கிரத்திற் றீமையை விளைக்குமென்று விசயை உண்மையாக எதிர்பார்த்தனள், 'பெண்கள் காமம்பிடித்தவர் உய்வரோ' என்ற மெய்ம்மொழியை முழுதும் நம்பினளாகலின்.

ஒருநாள் விசயை தன் தந்தையின் தீக்குணத்தைப் பற்றி எண்ணி மனம் வருந்தும்பொழுது இன்னலே உருக்கொண்டு வருபவள் போன்று சுந்தரி யென்னுமொரு கிழக்கூனி வந்தனள். விசயை மிகவும் மரியாதையுடன் ஓராசனத் துட்காருமாறு சொல்லித் தன்னிடம்வந்த காரியத்தை வினவினள். அதற்குச் சுந்தரி,

"உன்னைப்பார்த்தால் மிகவும் துயரமடைந்தவள்போல் தோற்றுகின்றாய்" என்றாள்.

"அப்படி மனவருத்த மொன்றுமில்லை. ஏதோ என்தங்கையைப்பற்றி யோசித்துக்கொண்டிருந்தேன். அவ்வளவுதான். வேறொன்றுமில்லை," என்றாள் விசயை.

"உன் பெயர்என்ன ?"

"என்னை இன்னளென்று அறியாயோ? ஏதோ முக்கியமான காரியமாக என்னிடம் வந்ததாகவன்றோ இதுகாறும் நினைத்திருந்தேன்."

"ஆம். உண்மையே. இவ்வாரண்மனையில் ஒருத்தியுடன் இரகசியமான வார்த்தைகள் பேசவேண்டுமென்றே வந்தேன். அவையெல்லாம் போகட்டும். உன் பெயர் என்னை?"

"என்னை விசயை என்பார்கள்."

"விசயையா! நான் கேள்விப்பட்ட பெயரே. மறக்கவில்லை. அரசனுக்கு என்ன உறவு?"

"அரசன் மகள்தான் யான்."

"ஏதோ தங்கை என்று சொன்னாயே. அவள் யாவள்?"

"அவள் இவ்விடமில்லை."

"நான் ஏதோ கேள்விகள் கேட்கின்றேனென்று மனத்தளர்ச்சி யடையவேண்டாம். அவள் பெயரை மாத்திரம் சொல்."

"அவள் பெயர் கமலினி."

"மதிமுக னென்றவனுடன் ஓடிப்போனவளோ?"

"அஃது என்னவோ எனக்குத்தெரியாது."

"உனக்கு உண்மையாகத் தெரியாதா? ஆயின் சரிதான்." என்று சிறிது யோசிப்பவள்போலச் சுந்தரி பாசாங்கு செய்தனள்.

"என்னிடம் ஏதேனும் காரிய மிருக்கின்றதோ?"

"உன்பெயர் விசயவல்லி யம்மையாயின் இரகசியமான விஷயங்கள் பேசவேண்டி யிருக்கின்றன."

"ஆனால் தடையின்றிச் சொல்லலாம். இஃது அந்தரங்கமான இடமே. யாரும் இவ்விடம் இப்பொழுது வரமாட்டார்கள்."

"உன் தங்கை—கமலினி—நாலைந்து நாழிகைவழித்தூரத்திற் கப்பால்தங்கியிருக்கின்றாள்.—என்ன? ஆச்சரியப்பட வேண்டாம். நான் சொல்வது மிகவும் உண்மையே. அவள் உன்னைப்பார்க்க மிகவும் விரும்புகின்றாள்."

"இன்னும் ஏதேனும் முக்கியமானவிஷயம் சொன்னாளோ?"

"உண்மையைச் சொல்லட்டுமா? நான் அவளுக்கு உயிர்த்தோழி. என் புத்திரிபோல் அவளை நினைக்கின்றேன். என்னவோ

சொன்னார்கள், உடனே வண்டி குதிரைகள் இளைப்பாறுமாறு தங்கிற்று. இருவரும் விசயையினை வண்டியினின்றும் வெளியே செல்லவிடவில்லை. பொழுது புலருஞ் சமயத்து ஒரு சிறு குடிசையிற் றங்கினார்கள். அக்குடிசையை யடைந்ததும் விசயை 'சமலினி எங்கே?' என்றனள். சுந்தரனும் அவன் சேவகனுமாகிய இருவரும் 'இன்னும் அரைக்காவத தூரத்திற்றான் கமலினி இருக்கின்றாள். பகற்பொழுதில் அவளைச் சந்தித்தல் முடியாது. அவள் இருப்பிடம் யாவரும் அறியலாகாது. ஆகையால் இன்று மாலை போகலாம்' என்றனர். விசயை இவர்கள் வார்த்தையை நம்பவில்லை. ஆயினும் என் செய்வாள்? சுந்தரனை இன்னனென்று அவள் தெரிந்து கொள்ளவில்லை, அவன் மாறுவேடந் தரித்திருந்தனனாகலின். பிறகு விசயை "நீங்கள் என்னை இம்மாதிரி அதிக இரகசியமாய் இவ்வளவு தூரம் அழைத்துவருவதைப்பார்த்தால் எனக்குச்சந்தேக முண்டாகின்றது. என்னை யாது காரணத்திற்காக அழைத்து வந்தீர்கள்? கொலை செய்வதற்கா? அதற்காயின் இவ்வளவு பிரயாசை நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டியதேயில்லையே. உண்மையைச் சொல்லுங்கள்" என்று பயத்துடனும் அதிகாரத் தொனியோடுங் கேட்டனள்.

"உன்னை அழைத்து வந்ததன் உண்மையைக் கூறினதனாற் றானென்ன? இனி எங்கள் கையிற் சிக்கிவிட்டாய். முதலில் என்னை இன்னனென்று உனக்குத்தெரியுமா? சிறிது ஆலோசித்துச்சொல். பார்க்கலாம்" என்று சுந்தரன் சொன்னான். விசயை கோடையிடியிடிப்பக்கேட்டுப் பயப்படும் நாகங்களைப்போலவும், புலியைக் கண்டு நடுங்கும் ஆட்டுக்குட்டியைப்போலவும் பயந்து,

"உன் பெயர் சுந்தரனன்றோ? அடே! கொடிய! என்னை ஏன் இப்படி வருத்துகின்றாய்? உனக்கு யாதொரு தீங்குஞ்செய்யாத என்னை இவ்விதத் துன்பத்திற் காளாக்குவித்தல் நேரிதோ?" என்றாள்.

"உன்னுடைய அழகின் ஒளிக்கதிர்களாகிய அம்புகள் என் மார்பைப் பிளந்துகொண்டிருக்க யாதொருதீங்கும் செய்யவில்லை என்று என்ன பாசாங்குசெய்கின்றாய்! இன்னும் மூன்று தினங்கள் இரவும் பகலும் இடைவிடாமற் பிரயாணமாகப்போக ஏற்பாடுகள் செய்திருக்கிறேன். யான் குறித்த இடத்தையடைந்ததும் உன்னை

அழைத்துச்செல்வதன் காரணத்தைச் சொல்கிறேன். இனி அடிக்கடி எங்களை வினவுவதிற் பிரயோசனமேயில்லை'' என்று சுந்தரன் சொன்னான்.

"பாக்குவெட்டியிடை யகப்பட்டுக்கொண்ட பாக்கு வெட்டுண்ணுமற்போமா? எப்பொழுது நீயர்களாகிய உங்கள் வலையிற் சிக்கிக்கொண்டேனே அப்பொழுதே யான் துன்பத்திற்காளாயினேன். நீங்கள் என்னதான் செய்கிறீர்களோ கடைசிவரையிற் பார்க்கின்றேன். பிறகு இறைவனிருக்கின்றான்'' என்று விசயை பெருமூச்செறிந்து கூறினாள்.

* * * * * *

விசயை வரும் வண்டியானது பாண்டியநாட்டின் தலை நகராகிய மதுரை யடைந்தது. மதுரையில் ஒரு சாதாரணமான வீதியிற் சீநிவாசன் என்பவன் வசிக்குங்கிருகத்தை யிவர்கள் அடைந்தார்கள். விசயை இருக்க ஒரு தனி அறை விடுத்தனரேனும் மிகவும் சாக்கிரதையாய்ச் சுந்தரன் பாதுகாத்து வந்தான்.

சீநிவாசனுக்கு விசயையினைக் கண்டதுமுதற் சுந்தரனிடத்து ஒருவிதப்பகைமை யுண்டாயிற்று. அதற்குக்காரண மின்னதென்று அவனுக்கே தெரியவில்லை.

இருபத்திரண்டா மத்தியாயம் முற்றிற்று.

சருக்கை - இராமசாமி ஐயங்கார்.

---

## ருக்மணி சரித்திரம்.

---

சுப்பையர், பொழுது விடிகிறதற்கு இரண்டு நாழிகைக்குமுன், ஐயம்பேட்டை வந்து சேர்ந்தார். அவர் மாப்பிள்ளை, ராயம்பேட்டையில் இருந்தார். வீட்டுக்குப் போவதற்கு வழி, சரியாய்த் தெரியவில்லை. ஆகையால் அவரும் அவர் அம்மாஞ்சியும், ரெயில்வே ஸ்டேஷனுக்கடுத்த ஒரு சாவடியிலுட்கார்ந்துகொண்டு, பொழுது விடிகிறதற்காகக் காத்துக்கொண்டிருந்தார்கள்.

"அம்மாஞ்சி, சகுனமாயும் பிரயோஜனமில்லாதெ போச்சே'' என்றார் சுப்பையர்.

"ஆமாம் அத்தான், நாம் பொறப்படச்சே வந்தாளே, அவ சொமங்கலி தானே?''

"ஆமான்டா ஆமாம்"

"எனக்கு சந்தேகமாத்தான் ருக்கு, அத்தான்"

"இல்லவே இல்லே. அவ, எறங்கச்சே அவமேலாக்கு நகந்துது, பளபளந்நு தாலியிருந்தது, அதெத்தான், நான் பார்த்தேன்."

"வெறுஞ்சரட்டைப் பார்த்துச்சொல்ரேபோல் ருக்கு என்டா அத்தான். இப்பொ கம்மனாட்டிக மயிர் வாங்கறதில்லே தெரியுமோனோ?"

"அப்படியா?"

"பின்னெ, இல்லாதபோனு எதுக்குடா வாங்கறது? அதிலெ என்னலாபஞ் சொல்லு"

"பெரியவா வழக்கத்தை மாத்தறதா? என்ன அநியாயம்! உனக்குநிச்யமாத் தெரியுமா?"

"தெரியுமடா தெரியும். மயிர்வாங்கிப்டாமாக்ரம் வழியாருக்காளாக்கும். என்னெக் கேட்டா வாங்காதவாதான் வழியாருக்கா"

"சாஸ்த்ர விருத்தமாச்சேடா"

"சாஸ்த்ரத்லே, ஆம்ட்யானேடே பொண்டாட்டியெ செத்து போகச் சொல்லிருக்கே. இப்பொ ஆர் செத்துப்போறு? மயிரெச் சரெச்சுப்டறதும் உடம்பு மழமழன்னு, காளேயாட்டமா ஆய்ட்ருள். எப்போதும் போலதான் ருக்கட்டமே. வழியாயிருக்றவா எப்போதும் வழியாயிருப்பா"

"நீ யென்னமோ சொல்றயே, நான் பாத்தேனேடா, தாலியே"

"ஒருவேளே தாலியும் வாங்காதேர்க்காளே என்னவோ"

"அது போறது சனி, விடு. ஸஹஸ்ர நாமத்தெச் சொல்லுவம்வா"

ஸஹஸ்ர நாமஞ் சொல்லி முடிந்ததும், பொழுதும் விடிந்தது. அவ்விருவரும், அண்டையிலிருந்த குளத்தில் முகங்கழுவிவிட்டு, விபூதியிட்டுக்கொண்டு சந்தியாவந்தனஞ் செய்தகொண் டிருந்தார்கள். இப்படி யிருக்கையில், அரைக்கால் மைல் தூரத்தில் இருவர் பேசிக்கொண்டிருந்தார்கள். ஒருவன், அழுக்குப்படிந்த வஸ்திரம் உடுத்திக்கொண்டு, மரத்தடியில் உட்கார்ந்து கொண்டிருந்தான். மற்றொருவன் சட்டைபோட்டுக்கொண்டு அண்டையில் நின்று பேசினான்.

"ஏஞ்சாமி பிடிச்சிட்ரதா"

"இல்லேடா, தஞ்சாவூர் இலாகாடா இது"

"பிடிக்கப்படாதா?"

"நீபோய், பாபநாசங் கொளத்தங்கரேலேரு நான் வந்துட்டேன் போசட்னு"

உடனே, அவன் போய்விட்டான். அவன் யார் என்றால், கும்பகோணம், சப்கோர்ட் சேவகன். மற்றொருவன், சுப்பையருக்குக் கடன்கொடுத்

திருப்பவன். அநேகந்தடவை சுப்பையரைப் பணங்கேட்டும், அவர் கொடுக்காதிருந்ததனால், அவர்மேற் பிராது செய்தான். அவன்பக்ஷத்தில், செலவு தொகையுடன் மூதலேச் சுப்பையர் கொடுத்துவிட வேண்டுமென்று தீர்ப்பும் ஆய்விட்டது. மறுபடியும் போய் ஐப்திக்குப்போனபோது, அவரது சொத்தை அப்புறப்படுத்த முடியவில்லை. ஆகையால், அவரைப்பிடித்து, ந்யாயாதிபதிமுன் கொண்டுவந்து விடும்படி உத்தரவாய்விட்டது. அதற்காக ஒரு சேவகனே அழைத்துக்கொண்டு, சுப்பையர் தஞ்சாவூரிலிருப்பதை அறிந்து புறப்பட்டான். தஞ்சாவூருக்கு வந்திறங்கினவுடன், அவர் திரும்பி வருவதைக்கண்டு, கூடவுந்திரும்பினன். அவர் ஐயம்பேட்டையி லிறங்கினவுடன் தானுமிறங்கினன். விடியுமட்டும் ரெயில்வே ஸ்டேஷனில் இருந்துவிட்டு, இப்போது சுப்பையரிருக்குங் குளத்தண்டை போனன். வழியில் ஒரு குதிரைவண்டிக்காரனேக் கண்டு, "அடே, வண்டியிலே, நாங்கள் மூணுபேரும் ஏறுவம். ராத்ரி சொன்னபடி ரொம்ப வேகமாய்ப் பாபநாசத்துக்கு அடிச்சுக்குண்டு போய்டணம். நீ கேட்டதைக் குடுக்றேன், அதோ, ரெண்டு பேர்ருக்காளே அவா எது சொன்னாலுந் தலைபர்ட்டு. சரிதானு?" என்றான்.

"சரி சாமி" என்று சொல்லி வண்டியெ மறைவில் ஓட்டிக்கொண்டு போனன்.

கடன் கொடுத்திருப்பது, இராமசாமி செட்டி-செட்டி குளத்தண்டை போய்ச்சேர்ந்தான். சுப்பையர் உடனே "செட்டியார்வாள் எப்போ?" என்றார்.

"சாமி தண்டம் இப்பதான்"

"எங்க போறகள்?"

"ராயம்பேட்டக்கித்தான்"

"நானும் அங்கதான்போறேன்; என்னகாரியம்?"

"அங்கெ, கிஷ்ணமாசாரி பணங்குடுக்கணுஞ் சாமி"

"அப்டியா, எவ்வளவு?"

"இரண்டாய்ரரூபா. ரண்டு வருஷ மாச்சு"

"போவமா?"

"போவம் ஏவண்டிக்காரா இங்கவாடா"

"வண்டி யென்னத்துக்கு?"

அம்மாஞ்சி கிருஷ்ணையருக்கு ஸ்ரமமாயிருந்தபடியால், "வாணு இருக்கட்டமே" என்று மெல்லச் சொன்னர்.

"ஆனு சரி" என்றார் சுப்பையர். ஆனல் சிறிது மனவருத்தத்துடன்தான். மேலும், "என்னடா கேக்கறே மூணுபேருக்கு, ராயம்பேட்டக்கி"

"குடுத்ததெ, குடுங்கசாமி."

"சொல்லுடா."

"அரை ரூபா குடுங்க"

"ஆளுக்கு ஓரணா, இஷ்டமா"

"ரெண்டணா வச்சுக்குங்க"

"ஒன்னரையணா இஷ்டமாயில்லையா"

"சரி ஏறுங்க"

"ஒக்காருங்க செட்டியாரே"

எல்லாரும், வண்டியி லுட்கார்ந்தவுடன் வண்டியை வெகு வேகமாய் விட்டுவிட்டான். சுப்பையருக்கு, அது ராயம்பேட்டைக்குவழி இல்லையென்றுதெரியும். ஆனாலும், சிறிதுநேரம் பார்த்துவிட்டு, "என்ன செட்டியாரே இப்படி விட்ரான்" என்றார்.

"என்னடாது?" என்றார் செட்டியார்.

"அங்கெ சாமி, ஒரு ஆளமா வாக்கா இருக்குங்க. ஆத்துக்கு பாலமில்லெ அதுக்குல்ல சுத்திப்போறேங்க இப்படி" என்றான் வண்டிக்காரன்.

"இருக்காக்கும். விடுவிடு" என்று பெருமூச்சு விட்டுக்கொண்டு கிருஷ்ணையர் சொன்னார். முன்னமே சொன்னபடி, கிருஷ்ணையருக்குச் சிறிது ஸ்தூலதேகம். ஆகையால் அவருக்கு வண்டியிலிருந்து இறங்கினால், சௌக்யமாயிருக்கும்போ லிருந்தது. நடந்து போவோம் என்றாலோ, அவரால் கூடவில்லை. ஆகையினாற்றான் சீக்கிரம் வண்டியை விடச்சொன்னார்.

இரண்டுமைமயிலுக்குமேற் போய்விட்டான். சுப்பையருக்கு, என்னவோ மனதிற் தோன்றிற்று. செட்டி மோசஞ் செய்வதாகத் தோன்றிற்று. அதைப்பற்றிப் பேசமுடியவில்லை. ஏனெனில், செட்டிபக்ஷம் வண்டிக்காரன். இவர்கள் இருவரையும் நொறுக்கிவிடுவான். கிருஷ்ணையருக்கு இச்சங்கதி யெல்லாந் தெரியாது. அவர், பெருமூச்சு விட்டுக்கொண்டு "கிருஷ்ண, கிருஷ்ண" என்று சொல்லிக்கொண்டிருந்தார். சுப்பையர் கண் கொவ்வைப்பழம் போற்சிவந்து, கண்களிலிருந்து தண்ணீர் ததும்பிக்கொண்டிருந்தது. அதைச் செட்டி பார்த்து, தனக்குட் சிரித்துக்கொண்டான்.

எல்லாவித எண்ணங்களும் சுப்பையர் மனத்திற் குழம்பிக்கொண்டிருந்தன. தான் வந்த காரியமென்ன! இப்படி மோசம்போனதென்ன! எங்கேயாவது, கல்யாணத்துக்குப் புறப்பட்டு, இப்படி அகப்பட்டுக்கொள்ளுகிறதுண்டா? ஆனாலும், ஒருவேளை, மூன்று மைலுக்கப்புறம் அப்பாலமிருக்கக்கூடாதா? செட்டியார் அவ்வளவுதூரம் செய்யமாட்டார். எல்லாவற்றிற்கும் காரணம், நமது விதிதானென்று நிச்சயித்துக்கொண்டு, "செட்டியாரே, எத்தனை மைலாச்சு" என்றார்.

"ஒண்ணறெ மைலாயிருக்குச்சாமி"

"இன்னம் பாலம் எவ்வளவு தூரம்?"

"இன்னம் ஒருமைல்"

சரியாய் ஐந்து மைலாய்விட்டது. சுப்பையர் தன் கவலையில் ஆழ்ந்திருந்ததனால், கணக்குச் சரியாய்த் தெரியவில்லை.

பாபநாசம் வந்து சேர்ந்தார்கள் எல்லோரும். சேகவனுக்கு, செட்டி கண்ணைக்காட்டினான். உடனே, சுப்பையர், தேம்பித்தேம்பி அழுதார். அவர் அழுதால் யார்விடுவார்கள்? இரண்டுமணி நேரத்துக்கெல்லாம், புகைவண்டி வந்தது. கும்பகோணம் ஸ்டேஷனிலிறங்கி, அந்நால்வரும் சப்கோர்ட்டுக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

பகலிற் பன்னிரண்டரை மணியாய்விட்டது. சூரியனது வெப்பம், மிகுந்ததாபத்தை உண்டாக்கிற்று. ஒருவரும் இன்னும் சாப்பிடவில்லை.

"என்ன ஐயா, சொல்றீர் பணத்துக்கு" என்று சொல்லி, செட்டி மௌனத்தைக் கலைத்தான்.

"அதான் தந்துட்றேன்னேனே, இப்பசரிப்படாது. வாணா ஜெயிலுக்குப்போறேன்" என்று குழறிக்கொண்டு சொன்னார்.

"சத்தியமா ஐயா"

"சத்யமாத்தான்"

"கடக்கறதுசாமி இப்பொகொஞ்சங் குடுங்க அப்புறம்பாத்துக்கலாம்"

"வாண்டாம் ஜெயிலுக்குப்போறேன்."

"இல்லேசாமி நூறுரூபாயாச்சிங்குடுங்க."

"ஒண்ணுமில்லே"

"கடக்கட்டம் சாப்புட்டு வாருங்க சாமி"

உடனே அடுத்த தெருவிலிருக்கும் சாப்பாட்டுக் கடைக்குள், எல்லாரும் நுழைந்தார்கள்.

(நான்காம் அதிகாரம் முற்றிற்று.)

கு. ரா. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்.

---

## சந்தான குரவர்.

(34-ம் பக்கத் தொடர்ச்சி.)

இவ்விதமாகச் சந்தானகுரவர் சரிதம் ஒருவாறு முடிவெய்தியது. இன்கேகூறிய கதைகளிற் சிலபாகங்களை மாற்றியுரைப்போரும் சிலபாகங்களை யறவொழிப்போரும் சைவநூல் வல்லாருள்ளேயே பலருண்டு. அதற்கெல்லாங் காரணம் இதுவரை அவர்கள் சரிதங்களைக் குறித்து நூலொன்று மேற்படாது ஐதீகங்களே எம்மருங்கினும் வழங்கிவந்தமையேயாம். சரித வேறுபாடுகள் சந்தானகுரவரைப் பற்றி யுண்டாகும் அபிப்பிராயங்களை

எவ்வழியிலேனும் மாற்றுதற் கிடமில்லை யென்று யாம் கண்டமையின் அவற்றைக் கொண்டுவந்து வீண்காலம் போக்காமல் விடுக்கின்றோம். உதாரணமாக, மெய்கண்டதேவர் ஞானோபதேசம் பெற்ற பருவம் இரண்டாமாண்டென்றார் ஆறுமுக நாவலர். மறைஞானசம்பந்தர் கைக்கோளர் வீதிவழிச்சென்று ஓரகத்துக்கூழருந்தி நிற்கையிற் கூழ்வார்த்துநின்ற பெண்ணனவள் சிவிகையேறி யாடம்பரத்தோடு சென்ற உமாபதியாரைக்காண விருப்புற்று விரைந்து சென்றாளாக, இவர் ‘பட்ட கட்டையிற் பகற்குருடன் போதலைக்கண்டு என் இத்தனை யாச்சரியம்?’ என மொழிந்து அவளைத்தடுத்து உமாபதியாரையுந் தமது அருள்வலையி லிழுத்தார்; அக்கணமே உமாபதியாரும் புகுந்து கூழின்சேடத்தை யேந்திக்குடித்து நன்ஞான முற்றார் எனச்சிலர் மாற்றிவழங்குகின்றனர். இவற்றால் உண்டாகும் நலங்கேடுகள் வலியுடையனவல்ல வென்று யாவரும் அறிவர்.

இனி, சிவஞானபோத ஆங்கில மொழிபெயர்ப்புகாரர்* நூலாசிரியரைப்பற்றி விஸ்தரிக்குமிடத்து ஐதீகம் பின்வருமாறு கூறுகின்றதென்று சொல்லி மெய்கண்ட தேவரது சரித்திரத்தைத் தாங் கேட்டபடி எழுதியிருக்கின்றார். அதிற்காணப்படுவன விசேஷ மாறுபாடுகளல்லவாயினும் அவற்றைத் தெரிந்துவைத்தல் நலமேயாகலின் மொழிபெயர்த்துத்தருகின்றோம். ‘தஞ்சை நாட்டில் திருவெண்காடெனப்படும் சுவேத வனத்தருகிலுள்ள திருப்பெண்ணாகடமென்னுங் கிராமத்தில் அச்சுதர் என்பார் ஒருவர் நெடுநாட் பிள்ளையில்லாதிருந்தமையால் சுவேதவன ஈசுவரனிடத்துப் பிள்ளைவேண்டிச் சதா வரங்கிடந்தார். ஒருநாட்காலை இவர் கோயிலையடைந்து பொற்றாமரையில் மூழ்கி ஸ்தோத்திர தியானாதிகள் முடித்து எழுந்தவுடனே பொற்றாமரைப்படியில் அன்று பிறந்த குழந்தை யொன்று இருத்தல் கண்டு அதனை மார்போடணைத்துக் கடவுளுடைய பெருங்கருணைக்காக அவரை வாழ்த்திக் குழந்தையை வீட்டிற்குக் கொண்டுபோய்த் தம் மனையாளிடத்துக்கொடுத்தனர். இவர்களிருவரும் குழந்தையை வளர்த்து வந்தார்கள். சுவேதவன ஈசுவரனது கொடையாகலின் குழந்தைக்குச் சுவேதவனன் என நாமகரணஞ்செய்யப்பட்டது. காலஞ் செல்லச்செல்ல அச்சுதருடைய உறவினர் சுற்றத்தார் ஏதோ கீழ்க்குலத்துப்பிறந்து கண்டெடுக்கப்பட்ட குழந்தையை இவர் வளர்த்து வருகின்றனரென விவரை இகழத்தலைப்பட்டார்கள்.

இதனாற் பெற்றாரிருவரும் மிகக்கவலை யுற்றிருந்தார்கள். ஆகவே, அச்சுதருடைய மைத்துனர் திருவெண்ணெய்நல்லூரிலிருந்து இவரைப் பார்க்க வந்தவர் குழந்தையைத் தாம் எடுத்துக்கொண்டுபோய் வளர்த்துக் கொள்ள விரும்பினதைக் குறிப்பாகக் காட்டியவுடனே அச்சுதரும் குழந்

---

* ம-া-া-ஸ்ரீ ஜே. யம். நல்லசாமிபிள்ளை அவர்கள், டிஸ்ட்ரிக்டு முன்சீபு, நந்தியாலயம்.

தையை மனமுவந்து கொடுத்துவிட்டனர். ஆதலால் மூன்றும் ஆண்டி லிருந்து குழந்தைக்குறைவிடம் திருவெண்ணெய்நல்லூ ராயிற்று. ஆனால் குழந்தை பிறந்தது முதல் ஊமையாயிருந்தது. ஆயினும் மணலினுற் சிவ லிங்கஞ்செய்து பூசை புரிதல், சிவலிங்கத்தின் முன்னேயிருந்து நிட்டை புரிவதுபோலக் கண்மூடியிருத்தல் முதலிய செயல்கள் அக்குழந்தையிடத் துக் காணப்பட்டமையால் அதனுடைய பெருந்தன்மையான மனப்போக் கும் வெளிப்பட்டுக்கொண்டு வந்தது. ஒருநாள் அவ்வழியே சென்ற சீவன் முத்தராகிய சித்தபுருஷ ரொருவர் குழந்தையைக்கண்டு ஆநந்த மெய்தி அதனுடைய உயர்ந்த பக்குவத்தை ஊகித்தறிந்து அருட்பார்வையால் நோ க்கி அதன் பெயரை 'மெய்கண்டதேவன்' எனமாற்றிச் சிவஞானபோதத் தாற் போதிக்கப்படும் தத்துவஞானத்தை யதற்கு நன்கு உபதேசித்தருளி னர். மெய்கண்டதேவரோ தமது ஐந்தாம் பிராயங் கழியுமளவும் ஊமை யாயே யிருந்தபோதினும், பொல்லாப் பிள்ளையாரென்னும் நாமமுடைய திரு வெண்ணெய் நல்லூர்க் கணேசப்பிரானிடத்தில் உபதேசத்தெளிவாகிய மே லுபதேசம் பெற்றுக்கொண்டு வந்தார். சூத்திரப் பொழிப்பும் சூர்ணிகை களும் அவராலேயே மெய்கண்ட தேவர்க்குக் கிடைத்தன வென்றுஞ் சொல் லப் படுகின்றது. இனி ஐந்தாமாண்டு கழிந்தவுடன் தேவர் திருவாய் மலர்ந்து சிவஞானபோதத்தைப் பிரசங்கித்து அநேக மாணவர்கட்கு அநுக்கிரகித்தார். அக்காலத்தில், திருத்துறையூரிலே சகலவேதாகமங்களிலும் பாண்டித்தியம டைந்து அக்காரணத்தினுல் சகலாகம பண்டிதரெனப் பெயர்பெற்று விளங் கிய அருணந்தி சிவாசாரியர் என்னும் ஒரு பிரபலவித்வான் இருந்தார். அவர் தமது சிஷ்யக்குழாங்களோடு திருவெண்ணெய் நல்லூர்க் செழுந்தருளினர். அங்குத் தங்கிய காலத்து அவருடைய மாணுக்கரிற் பல்லோர் மெய்கண்ட தேவர் உபதேசங்களைக் கேட்டு மகிழ்ந்தவர்களாய் அருணந்தியாரை விட்டுப் பிரியத் தொடங்கினர். சிஷ்யர்கள் ஒருவர்பின் னொருவராய்த் தம்மை விட்டு நீங்குதலைக்கண்டு சகியாதவராகிய அருணந்தியார் மெய்கண்ட தேவரை நே ரிற்கண்டு அவரைத் தொலைத்து வர்வேண்டுமென்று தீர்மானித்து அவரிரு க்கு மிடஞ்சென்றுர். மெய்கண்டதேவர் கிருபாகடாக்ஷம் பண்டிதர்மேல் விழு தலும் அஞ்ஞான அகங்காரங்கள் அவரை விட்டு நீங்கின. பின்னர் அருணந்தி யார் தேவரது தலைமாணுக்கராகிச் சிவஞான சித்தியார் முதலிய வழி நூல் களியற்றினர். இங்கே ஒருவிஷயம் கவனிக்கத்தக்கது. மெய்கண்டதேவர் வேளாளர், அவரது வளர்ப்புப் பிதாமாதாக்களாவது வேளாளரே, ஆயி னும் பிராமணருள் உத்தமோத்தமஸ்தானத்தை வகித்திருந்த அருணந்தி சிவாசாரியரும் அவருக்குச் சிஷ்யராக மனங்கோணவில்லை.

மெய்கண்டதேவரைப்பற்றி யாம் சரிதத்தால் அறிந்ததெல்லாம் அவரது பிறப்பு வளர்ப்பு, அவர்க்கு ஞானோபதேசம் கிடைத்தது, அவர் தமது மாணுக்கர்களுக்கு ஞானோபதேசஞ் செய்தது என்பனவையே. இவையே

யன்றி யவர் நைஷ்டிக பிரமசாரியா கிரஹஸ்தனா வென்பதுபோலக் கிளைக்குங் கேள்விகளுக்கு விடை யகப்படுவதாயில்லை. எனினும், ஒழிவிலொடுக்கஞ்செய்த கண்ணுடைய வள்ளலாரை இவர்க்குத் தாயராக்கியிவ்விருவரையும் பற்றிவழங்கு மைதீகமொன்றுண்டு. வேதாகமோக்த சைவ சமயாசாரியராய் விளங்கிய மெய்கண்டதேவர்க்குப் புத்திரனுபவரித்த வள்ளலார் மேலான ஞானநெறியிலேயே மனம் பற்றினவராய்ச் சரியை கிரியையோகமென்னும் மூன்று பாதங்களையும் பழித்து நூலெங்கும் தற்போத வொடுக்கமே வேண்டற்பாலது என முழக்கி யதனைத்தவிர வேறொன்றுங் கூறாததற்கறிகுறியாக (தற்போத) ஒழிவிலொடுக்க மெனத் தமது நூற்குப் பெயருமிட்டருளி யதனைத் தந்தந்தையாரிடத்துக் கொண்டுபோய்க் காட்டினர். மெய்கண்டதேவரோ பக்குவவேறுபாடுகளுக் கேற்ப வழங்கிவரும் வழிபாட்டு வேறுபாடுகளையு மாதரித்து வந்த ஞானக்களஞ்சிய மாதலின் இதனைக் கண்டுமனமுளைந்து பூசையிலிருந்தவாறே சிறுகோப வெளிப்பாட்டினால் தமது திருமேனியிலிட்டிருந்த விபூதிதிரிபுண்டரக் குறிகளை யழித்துச் 'சைவசமயத்துக்கும் அச்சமயத்தின் சின்னங்களாகிய விபூதி ருத்திராக்ஷங்களுக்குங் கேடு வந்ததே' என்று இரங்கினர். இன்னும், வள்ளலாரினத்து வந்தார் கைகளிற் குறிகளையிட்டு அழிக்கும் வழக்கத்தைச் சுட்டிக்காட்டியிக்கதை மெய்ம்மையே யென்று நிறுத்துவார். ஆனால், சித்தாந்த சமயபாநுவாகிய மெய்கண்டதேவரிடத்திலுதித்த வள்ளலார் இவரிடத்தேயே யுபதேசம் பெற்றுக்கொள்ளாது வேறுவழியிற் புகுந்ததற்கும், அதிபிரபலமுடைய இவரைத் தமது நூலுளொரு முறையாயினும் எடுத்து வழங்காததற்குந் தக்க காரணம் புலப்படவில்லை. வள்ளலார் முதல் வெண்பாத்தொடங்கிப் பலமுறையும் சீகாழிச் சம்பந்தப் பெருமானை வாழ்த்தினராகலின்

"பட்டினத்துப் பிள்ளையினைப் பத்ரகிரி யைப்பரவி
விட்டுவிட மாட்டார் வெறுவீடர்—வெட்ட
வெறு வெலும்பை நாய்கறண்ட வேந்தர்வர நாய்பார்த்
துறுமுவதைக் காட்டுவோ மோ."

"சுந்தரனார் சேரர்கோன் சோழர் குறுமன்னர்
மைந்தருட றம்முடலை வாட்டினர்கள்—அந்தமிலாப்
பத்தரொடு ஞான வயிராக் கியர்பலர்க்கும்
ஒத்ததுசார் போதவொழிவு."

என்னும் திருவெண்பாக்கள் அந்நூலுட் காணப்படவில்லையாயின், அவர் காலம் சம்பந்தர் காலமேயெனச் சொல்ல வேண்டிவரும். பட்டினத்துப் பிள்ளைபத்ரகிரிகாலம் சாலிவாகனசகாப்தம் 850-என்று உத்தேசமாகத் தெரிகின்றமையின் மெய்கண்டதேவரது காலமாகிய சாலிவாகனசகாப்தம் 1150-க்குப் பின்னர்த்தான் வள்ளலார் உலகத்துப் பிறந்தார் என்று உறுதியாய்க்

கூற முடியவில்லை. மற்று, கண்ணுடைய வள்ளலாரைப்பற்றிச் சீகாழியில் வழங்கும் ஐதிகம் வருமாறு: சீகாழிப்பதியில் ஒரு செல்வவந்தர் வீட்டிற் செல்வப்பிள்ளையாய் அவதரித்து அக்காரணத்தினாற் சகல கலைஞானங்களிலும் அபரிமித விற்பத்தியடைந்து தேரும் அவகாச முதலியன பெற்றிருந்த நமது வள்ளலார் தினந்தவறாது திருக்கோயிலுக்குப் போவது வழக்கம். அப்பதியிலேயே அவதரித்துச் சிவபெருமானது செல்வக்குமாரராய் விளங்கிய ஞானசம்பந்தப்பிள்ளையாரது அருட்சரிதங்களைக் கேட்டல் மாத்திரையேயன்றி, அவற்றுட் பெரும்பான்மையும் நிகழ்ந்த இடத்தில் தாமும் தங்கும் பெரும்பேறு பெற்றமையால் வள்ளலார் பிள்ளையாரிடத்துப் பேரன்பு பூண்டு அவரையேதமக்கு ஆசிரியராக்கொண்டு உபாசித்து வந்தார். உபாசனையின்பலனாகிய ஞானந் தம்மனதுள் தோன்றிய காலந்தொட்டு வள்ளலார் பிரதிதினமும் கோயிலுக்குப்போய்த்திரும்பித் துயின் றெழுந்து ஒரு வெண்பாச் செய்துவந்தார். கோயிலில் நெடுங்காலம் போக்கி மீளுதல் இவர்க்கியல்பாகலின், இவர்க்கு வழிகாட்டியாகக் கந்தன் என்னும் ஒருவேலைக்காரன் தீவர்த்திசகிதம் உடன் செல்வது வழக்கமாயிருந்தது. இருநூற்றைம்பத்து மூன்றும் *வெண்பாவிற் குரிய தினத்தில் நெடுநேரமாயும் வள்ளலார் வீட்டிற்குத் திரும்புவதாயில்லை. மத்தியில் மின்னலுமிடியும் மழையும் மிகுந்து தெருக்களிலெல்லாம் வெள்ளம் ஓடத்தலைப்பட்டது. கந்தன் வீட்டிலேயே யிருந்து விட்டான். வள்ளலார் தரிசனம் முடிந்து கோயில் வாயிலையணுகிக் கந்தாவென்னலும் ஸ்ரீசுப்பிரமணியப் பெருமானே கந்தனுருக்கொண்டு அவ்விடத்துத் தீவர்த்தியுங் கையுமாப்புகுந்து வழிவிட்டான். வீடுபோய்ச்சேர்ந்ததும் பழைய கந்தன் மன்னிப்புக் கேட்டற்காக ஒடுங்கி முன்வந்து நின்றான். கூடவந்த கந்தனைத் திரும்பிப்பார்த்தவர் அவனைக்காணாராய்த்திகைத்தார். பின்னர் இஃது எமது ஞானசம்பந்தன் அருள்விளையாட்டே யாகுமெனத் துணிந்து அன்றிரவு வெண்பாப் பாடிமுடித்து அந்நூலுக்கு ஒழிவிலொடுக்க மெனப்பெயருமிட்டுத்தம்பக்கலுள்ள ஞானபக்குவர்களிடத்து மனமுவந்து கொடுத்தார். காலையெழுந்ததும் தம்பெருந்திரவிய மத்தனையும் அரைக்கணத்தில் வாரியிறைத்துத் துறவுமேற்கொண்டார். இவ்வாறு வழங்குமைதிகத்தை நம்புவாரிற் சிலர் திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள் உரைகண்ட நூல்களெல்லாம் சற்றேறக்குறைய அவர் காலத்தனவேயாம்; ஒழிவிலொடுக்கக் காலமும் இருநூறு வருஷங்கட்குட்பட்டேயிருக்கும் என்கின்றனர். அதனுடைய மெய்ம்மை பொய்ம்மைகளை யாராயப்புகின்விரியும்.

---

* கண்மணியி னாகாய நீழல் கலந்தாற்போல்
உண்மையைநீ யுண்டென் றெனையுணர்த்தித்—தண்ணெனவே
பார்த்திருந்த சித்திரம்போற் பார்த்தானை நாம்பரவித்
தோத்திரஞ்செய் யாப்பிறவிச் சொல்.

இனி, சந்தானாசாரிய புராணசங்கிரக நூலைப் பின்பற்றி மெய்கண்ட
தேவரது மாணாக்கருள் ஒருவராகச் சிற்றம்பலநாடிகளைக் கூறினோம். அவ்
விஷயம் சற்று ஆராய்ச்சி செய்யற்பாலது. இவ்வாசிரியர் இயற்றிய துக
ளறுபோதமென்னும் சித்தாந்த சாஸ்திரப்பாயிரத்தில்

'பதிபசு பாசந் தெரிந்தந்த பாச
விதிவழியை வென்றதனின் வேறாங்—கதிவழங்கு
மெய்கண்டான் சந்தானமேவிற் சிவாநந்தங்
கைகண்டார் காணார் கரு''

எனக்கூறுதல்பற்றி இவரை மெய்கண்டதேவரது சீடரெனத் துணிந்
தார்போலும். சிற்றம்பல நாடிகளென்னும் பெயரால் மூவர் பெரியோர்
வாழ்ந்திருந்தனர். அவருள் துகளறுபோதம் திருச்செந்தூரகவல் முதலிய
நூல்கள்செய்த சீகாழிச் சிற்றம்பல நாடிகளே ஆதிகாலத்தவர் என்றா
கித்தீதற்குத் தக்க நியாயங்களுள. அவ்வாசிரியரைப் பற்றித்தான் நாம்
"ஒருசமயம் இவர் மெய்கண்டதேவரிடத்து உபதேசம் பெற்றிருக்கலாம்''
என்றுசொல்ல நாவெடுக்கலாம். ஆனால் துகளறுபோத முகவுரைக்காரர்
"**சிவப்பிரகாசத்திற்கு** உரையியற்றிய மதுரைச் சிவப்பிரகாசர் "ஓது
புகழ்ச்சகாத்த மாயிரத்து நானூற்றொரு பதின்மேற் செல்கின்ற காலந்
தன்னின், மாதுபயில் மதுரையில்வாழ் சிவப்பிரகாசன்'' என்னு மிவ்வு
ரைச் சிறப்புப் பாயிரத்தால் இற்றைக்கு நானூற்றுப்பத்து வருடத்
திற்குமுன்பிருந்தாரென்று விளங்கலானும், அவர் 'திருவருள் கொடு
த்து'' என்னுஞ் சிவப்பிரகாசச் செய்யுட் கியற்றிய தமதுரையில் "உற்ற
சரியை'' எனும் துகளறுபோதப் பாயிரச்செய்யுளை யெடுத்துக்காட்டுதலா
னும், இத்துகளறுபோதவாசிரியர் உமாபதி சிவாசாரியாரருளிய திருவரு
ட்பயனிலுள்ள "தாடலைபோற்கூடியவை'' எனுமுவமையைத் தந்நூலில்
"சாற்றி லதற்குவமை தாடலைபோல்'' எனவெடுத்தருளுதலானும் இந்நூல்
சற்றேறக்குறைய நானூற்றைம்பது வருடங்கட்குமுன் னியற்றப்பட்டதென்
பது இனிதுவிளங்கும்'' என்றுகூறினராகலின் உமாபதியார்க்குப் பின்வந்து
அவர்நூலி லிருந் துவமையெடுத்தவர் மெய்கண்டதேவரிடத்து நேரில்
உபதேசம் பெற்றாரென்பது எளிதில் மறுக்கப்படும். அன்றியும் துகளறு
போதம் பல சித்தாந்தநூல்க ளொப்பப்பிரமாணமாகக் கருதப்படுந் தன்
மையது. உரையாசிரியர்கள் அநேகர் எடுத்தாண்டிருக்கிறார்கள். உமாபதி
யார் காலத்திற்குமுன் இது தோன்றியிருக்குமாயின் சாத்திரத்தொகுதி
யுட்பட்டுக் கணிக்கப்படுதற்கு யாதோர் இடையூறுமிருந்திருத்தல்த
காது. ஆகலானும் சிற்றம்பல நாடிகள் பிற்காலத்தவரே யாகின்றனர்.

தமிழ்நூல் ஆராய்ச்சி நன்கமையப்பெறாத சிலர் சைவசமயநெறி சிவ
தருமோத்தர முதலிய நூல்செய்தார் நால்வருள் ஒருவராகிய மறைஞான

சம்பந்தரே யெனத் துணியுந் திரிபுணர்ச்சியுடையரா யிருக்கின்றனர். மூன்ருங்குரவராகிய கடந்தை - மறைஞானசம்பந்தர் சிவஞானச்செல்வராய் அத்தியாசிரமியாய்ச் சகசநிட்டையுடையராய் விளங்கிய பெரியரென்றே ஐதீகம் வழங்குகின்றதனுலும் சைவசமயநெறிமுதலிய இயற்றினரைக் குகை-மறைஞானசம்பந்த நாயனுரென்று தமிழுலகம்வழங்குவதன்றியும் இவர் சிதம்பரத்துச் சைவாசாரியரென்றுங் கூறுதலானும் அவர் வேறு இவர் வேறு என்பதே தேற்றம்.

சைவசித்தாந்த சாத்திரங்களுள் எட்டுச் சாத்திரஞ் செய்தவர் உமாபதிசிவாசாரியரேயென்று யாம் முன்னர்க் கூறிய அவர் சரித்திரத்தால் தெரியவரும். அவர்செய்த வேனைய நூல்களின் பெயரும் கூறினேம். அவை திருப்பதிகக்கோவை, திருப்பதிக்கோவை, சேக்கிழார் புராணம், திருத்தொண்டர் புராணசாரம், கோயிற் புராணமென்பன. திருப்பதிகக்கோவை யென்பது மூவர்பெருமக்களும் அருளிச்செய்த தேவாரத் திருமுறைகளில் மறைந்துபோனவொழிந்தெஞ்சிய வற்றிற்கு அளவு பெயர் முதலியன சொல்வது. இத்தேவாரங்களுக் குரிய தலங்களின் பெயர் முறைகளை எடுத்துரைப்பது திருப்பதிக்கோவை. பெரியபுராணஞ்செய்த அருண்மொழிச் சேக்கிழாரது அற்புதசரிதத்தை யுரைப்பது சேக்கிழார்புராணம். உமாபதியாரிடத்து விஷயங்களைப் பெருக்கி யுரைத்தல் அதிசயோக்தியலங்காரத்தில் மிகத்திளைத்தல் முதலிய துர்க்குணங்களில்லை யென்பது ஆங்கிலநூல் வல்லாருங் கண்டறிந்த உண்மை. திருத்தொண்டர் புராணமாகிய பெரியபுராணத்து வருங்கதைகளைச் சுருக்கி ஒரு செய்யுள் இரண்டு செய்யுட்களில் விளக்கிக் காட்டும் நூலே திருத்தொண்டர்புராண சாரமாம். வடமொழியிலுள்ள சிதம்பர க்ஷேத்திர மகாத்மியம் தமிழிற் கோயிற்புராணமெனச் செய்யப்பட்டது. உமாபதியார் வடமொழியினும் வல்லாரென்பது அவரது வருணம் குலம் முதலியவற்ருல் விளங்குமாயினும், அவராற் செய்யப்பட்ட பௌஷ்கராகமவிருத்தியை யதற்கே ஒரு சான்ருகக் காட்டல் தவருகாது. தருக்க நூல்களது சாரங்களெல்லாந் தன்னகத்தடக்கியது என்றும், சித்தாந்த உணர்ச்சிக்கு மிகச்சிறந்த நூலென்றும் கேள்விப்படுகின்ரேமேயன்றி நூலை நேரே பார்த்ததில்லை. திருவாவடுதுறை மடத்திலுள்ளதென்றுங் கேள்வி.

அனவரத விநாயகம் பிள்ளை.

(இன்னும் வரும்.)

# தனிப்பாசுரத் தொகை.

## நூல்.

வாய்வா ளாமை மேயநூற் குரவிர்காள் !
பேசலி ரெனினும் பெருங்கருத் துணர்வல் :—
‘சிறிதியா மறிவே முறுமினி முழுவதும்
பொறையொடு முழைப்பை’யென் றறிவுறுப் பீர்காள் !
களையின் றும்மியல் கலைநல மாட்சியீர் !
அரிய கதைசொலி யாதலு மழிதலு
மின்னண மென்பிரால் ; பொன்னுல கினருறும்
புலவர் கருத்தின் போக்கறி கலரே.
மக்களும் பொருளுமென் வாழ்குர வோரே.
இயற்கையின் பல்குர வினிலெனைச் சுற்றி
இசைகுர லோர்வலர், எத்துணை யெளியென்யான் !
நினைவுவா டாமலர் நேர்ந்து கூட்டுழி
அனைத்துமன் பாட்சியென் றறிவேன்
அறிசர மெய்யெலா மளிப்பையென் னிறையே.

## போர்.

முந்தை நாட்களின் மூதறி விலார்சற்
சிந்தை யாளர் சிறிது மருளிலர்
மண்ணசை யானும் பெண்ணசை யானும்
பொன்னசை யானும் புகழ்நசை யானும்
நன்னலங் கருதார் ஞாட்பி னுயிர்களைக்
கொன்னே யம்ம கொன்று குவித்தனர் !
அறனெறி முதிரா மறநெறிக் காலத்து
வன்போ ரென்பது வல்லடி வழக்காம்.
அன்போ டறனு மருளும் பழுத்தொளி
ரிற்றை ஞான்றினும் வெற்றுப் போர்செய
லெற்றிற் கோவென் னினிய மாந்தர்காள் ?
ஆருயி ரோம்பலே போரினுஞ் சிறக்க ;
பொறையுள மெங்கணும் பொருந்துக ;
அறைகடல் சூழிவ் வங்கண்ஞா லத்தே.

பரிதிமாற்கலைஞன்.

# இளையாழ்வார் என்னும் ஸ்ரீராமாநுஜாசாரியர் சரிதம். *

## காப்பு.

கட்டளைக்கலித்துறை.

மங்காத செல்வ மலிபெரும் பூதூர் வளநகர்வந்
தங்கார் வணன்திரு மால்சம யத்தை யவனிமிசைப்
பொங்கா தரவின்வைத் தோனற் சரிதம் புகலவனுன்
கொங்கார் கமலச் சரணென் றலைமிசைக் கொள்ளுவனே.

## அவதாரிகை.

மலரவனாற்படைக்கப்பட்ட அண்டங்களனைத்திற்கும் அப்புறத்ததாய், அயன்முதற்றேவர்க்கும் அடைதலரியதாய், அகப்பற்றும் புறப்பற்றுமற்ற அடியருக்கெளியதாய், பல்லாயிரரவி கூடியுதித்தாற்போலும் அளவிடற்கரிய வொளியினையுடையதாய், அனைத் துலகத்தாலும் புகழப்படுவதாய், ஆனந்த மயமாய், தன்னையடையுநர்க்கு இப்பொல்லா நிலத்தில் மாண்டு பிறக்குந் துயரினை மாற்றுவதாய், அகண்ட காலமேயன்றிக் கண்டகால மியலப்பெறுத தாய், ஒப்புயர்வில்லாததாய், நித்தியமாய் விளங்கும் திருநாட்டின்கண்,

† "மூவா முதலா வுலகம்மொரு மூன்று மேத்தத்
தாவாத வின்ப" த்ததாய்ப்

பொன்னிறப் பொழில்களும், சந்திரகாந்த விமானங்களும், மணிமதில் களும், கோபுரங்களும், மண்டபங்களுமுடையதாய் மறை முதற்கலைகள் இனைத்தென்று சுட்டுதற்கரிய தோற்றத்ததாய் இயங்குகின்ற வைகுந்த நக ரத்தின் திருமாமணி மண்டபத்து நாப்பண், அனந்த கருடர் முதலிய நித்திய ராலும், ஏனைய முக்தராலும் போற்றப்படுபவனாகிப் பொன்மகளும் மண்மக ளும் புறத்திலமர, ஆழிமுதலைம்படையுந்தாங்கி ஆரகேயூராதி அணிகளும், உலகனைத்திற்கும் இவனே ஒரு நாயகமென்பதை யுணர்த்துங் ‡ "கதிராயிர மிரவி கலந்தெறித்தாலொத்த நீண்முடியும்" அணிந்து, ஏழுலகும் தனிக் கோல் செல்ல வீற்றிருக்கும் திருமால், அவ்வைகுந்த மாநகரிலுள்ளார் எக்காலத்தும் பேரானந்தத்தையே நுகருமாபோல ஏனைய உலகிலுள்ள எல் லாவுயிர்களும் தத்தம் முயற்சியால் அப்பேருலகினையடைந்து இன்புற்று வாழலாம்படியிருக்க அவ்வாறு செய்துய்யாமல், தன்னைத்தரிசித்தல், போற் றல் முதலிய செய்தற்பொருட்டுத் தந்தருளிய கண், வாய் முதலான உறுப் புக்களில் அவனை "வாயினாற் பாடியும் மனத்தினாற் சிந்தித்தும்" § "அரங்க

* இது அச்சிலிருக்கிறது. சீக்கிரம் வெளிவரும்.
† சீவகசிந்தாமணி. ‡ பெரியாழ்வார் திருமொழி. § திருமாலை.

ணர்க்காட்செய்யாதே" * "உண்டியே யுடையே யுகந்தோடி" † ஸம்ஸாரமாகிற பெருங்கடலிலே விழுந்து நோவுபடாநிற்கக்கண்டு இவ்வுயிர்கள் நம்மை யறியாது வருந்தி வாடுகின்றனவே ! என்று திருவுள்ள மிரங்கி, நடுக்கடலிற் றிசைதப்பி யலைபவனுக்குக் காருணிகனான ஒருவன் தோணியை யுதவினாற்போலப் பிறவிப் பெருங்கடலில் வீழ்ந்து அல்லற்பட்டுழலும் மக்களுக்குப் பவக்கடல் கடந்துய்யலாம்படி மீளவுங் கருணைகொண்டு கிணற்றினுள் வீழ்ந்த குழந்தையையெடுக்க அதனுள் உடன்குதிக்கும் தாயைப்போலத் திருமால் தான், இப்புவிதனில் இராமகிருஷ்ணாதி யவதாரங்களைச்செய்து உலகைத்திருத்தப் புக்கவிடத்தும், தன்னை யவர்கள் அறிந்துய்யமாட்டாதே விமுகராய்த் "தந்நெஞ்சிற் றோற்றியதேசொல்லி" இடும்பையிற் புகுந்து வருந்துகின்றனர்.

இங்ஙனமாக, ஸர்வேசுவரன் தனது நிர்ஹேதுக கிருபையினால் மானைக் காட்டி மான்பிடிப்பாரைப்போல, அவர்தம்மோடொத்த பண்பினரென்றெண்ணலாம்படி ஆழ்வார்களை யவதரிப்பித்தான்.

இவ்வாழ்வார்களோவெனில், ரிஷிகள்போல யோகமுதலிய முயற்சியாலாகும் ஞானமுடையராகாமல், அவனருளாற் போந்த அளவிலாப் பரம ஞான வைராக்கிய பக்தியுடையராய் எல்லாரும் ஓதியுய்யத்தக்க செவிக்கினிய செஞ்சொற்றமிழ்நூல்களால் சகலவேத வேதாந்த ஸாரார்த்தங்களை அருளிச்செய்து உலகத்தை வாழ்வித்தவராதலின இவர்கள் ரிஷிகளினுமதிக மேம்பாடுடையர்.

இவர்தம் அவதாரக்கிரமம் ஏதோவெனின், ஈசுவரன், ஸ்ரீ பூமி நீளா தேவிகளையும், ஸ்ரீபஞ்சாயுதங்களையும், ஸ்ரீவத்ஸ கௌஸ்துபம் முதலிய சின்னங்களையும் அனந்தன் கருடன் முதலோரையும் நோக்கி 'நீவிர், ஏற்றபடி பூலோகத்திற் பலசாதிகளிலும் பிறந்து உலகத்துயிர்களைப் பிறவிப்பெருங் கடலினின்றுங் கரையேற்றிவிடுங்கள்' என்று நியமித்தருள, அவர்களும் அவ்வாறே ‡ ஆழ்வாராதியராக அவதரித்தார்கள்.

இத்தனையோடமையாமல் திருமால், வேதங்கட்கு மாறுபடப்பொருள் கூறுவண்ணம் அவற்றிற்குத் தக்க பொருள் கூறி நிலைநிறுத்தத் திருவுள்ளங் கொண்டு,

|| "சென்றாற் குடையா மிருந்தாற் சிங் காதனமாம்
நின்றால் மரவடியா நீள்கடலுள்—என்றும்

---

* திருப்பாவை. † பெருமாள் திருமொழி.

‡ ஆழ்வார் - ஈசுவரனது குணங்களில் ஈடுபட்டு ஆழ்ந்தவர் என்பது கருத்து.

|| இயற்பா - முதல் திருவந்தாதி. உபதேசரத்தினமாலை.

புணையா மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கு
மணையாந் திருமாற் கரவு" என்றபடி,

எக்காலத்தும் தன்னைவிட்டு நீங்குதலில்லாத திருவனந்தாழ்வானை நோக்கி ' நீயும் உலகத்துதித்து வேதார்த்தங்களைச் செவ்வனே வெளியிடக் கடவாய்' என்று கட்டளையிட, அத்திருவனந்தாழ்வானும் **'இளையாழ்வான்'** என்ற திரு நாமத்துடன் அவதரித்தார்.

---

## நூல்.

எல்லாப் பொருள்கட்குங் காரணமாயுள்ள மேகமானது கலைமகளின் உருவம்போல வெண்ணிறமுடையதாய் விண்ணிடைப் பரந்து கடலிற் படிந்து நீரினைக்கவர்ந்து உமையவள் திருமேனிப்பொலிவே போலக்கருமை நிறங்கொண்டு சென்று, ஆகாயத்தின் வயிற்றைக்கிழித்து ஊடுருவிச்செல்லும் சிகரத்தையுடைய நந்திமலை குளிர்ச்சியடையப் பொழிந்த தண்ணீர், காமதேனுவின் மடிசுரந்து பொழிந்த மதுரமான பால் வெள்ளம் போலத்திசைகள் தோறும் சென்று செழிப்பிக்கும் அருவிநீர்த் தாரைகள் அம்மலையிலிருந்து இறங்குந்தோற்றம், இந்திரனது மார்பிலுள்ள முத்துவடத்தையொக்கும். அன்றியும், அம்மலையிலிருந்து இறங்கி மண்மீது திரண்டு செல்லுந் தோற்றமானது, முன்பு ஆதிசேஷன் வாயுபகவானுடன் சபதஞ்செய்து தன் ஆயிரம் படங்களையும் விரித்து மிக்க உயர்வினையுடைய 'மேருவரையின் சிகரங்களையெல்லாம் மறைத்ததையும் ஒக்கும். இத்தகைய மேன்மையுடன் செல்லும் அந்தவெள்ளமானது யானைத்தந்தத்தின் முத்துக்களையும் அகிற்கட்டைகளையும் சந்தனத்தருக்களையும் குங்குமத்தருக்களையும் முறித்து, வரையாது கொடுக்கும் இயல்புவாய்ந்த நன்மக்களேபோலவும், தன்னைக் கருவிருந்து பெற்ற மேகம்போலவும் தானே ஊர்தோறுஞ்சென்று மலைபடு பொருள்களனைத்தையும் கொடுக்கப்பெயர்ந்து மடுக்கள், குளங்கள் ஏரிகள் ஆகிய இவற்றைநிரப்பி மீட்டும் தன்னினமான கடலையே நோக்கிச்செல்லல், ஒரு கற்புடைய மடந்தை தன் தலைமகனிடஞ் செல்லுங்கால் தனக்குக்கிடைத்த சந்தனம் முதலிய போகப்பொருள்களைக்கொண்டு செல்வதையும், முற்பிறப் பிற்செய்த நல்வினையானது பிற்பிறப்பில் அச்செய்தானையே நாடிச்செல்வதையும் போலும்.

இத்துணைப் பேரழகுவாய்ந்த 'பாலாறு' என்னும் பெரிய சொருநதி பாயப்பெற்றதும்; மா, பலா, வாழை, தெங்கு, கமுகுமுதலிய பல விருட்சங்கள் குலவப்பெற்றதும்; கல்வி சிற்பம் கைத்தொழில் வர்த்தகம் என்னும் இவை கவினப்பெற்றதும்; நவரஸபாவ சுற்பனுலங்காரக வீரரின் புகழ்கமழப் பெற்றதும்; பொய்கை பூதம் பேய் மழிசையர்கோன் முதலிய ஆழ்வார்கள் அவதரிக்கப்பெற்றதுமாய இத்தொண்டை நன்னாட்டின்கண், மூவரும் மற்

றைத்தேவரும் முத்தரும் சித்தர் முதலிய பக்தரும் பற்றிக்கிடக்குமிடமாய்; நீரிற்றோன்றும் செந்தாமரை வெண்டாமரை செவ்வல்லி கருங்குவளை முதலியன எப்போதும்மலர்ந்து, நாரை அன்னம்முதலிய பறவைகள் நிறைந்து, சான்றோர் செய்த நூற்பொருள்போலாழ்ந்து, அவரறிவேபோற்றெளிந்து, அன்னோர் புகழே போற் பரந்து அவரது இதயம்போற் குளிர்ந்து, தம்மிடமிவர்ந்துபடிந்து தாபங்களை யாற்றிக்கொள்ளுமாறு யாவரையுங் கரமெடுத்தழைப்பதுபோல அலையெறிந்து என்றும் விளங்குகின்ற நீர்அருத மானதப் பெருவாவிபோலும் பல தடாகங்கள் சூழப்பெற்றதாய்; நீர்த்திரைகள் திரைபெழில்காட்ட, செந்தாமரைகள் விளக்கொளிசெய்ய, வண்டுகள் சுருதிகூட்ட, மதவொலி மத்தளவொலிசெய்ய, மாங்குயில்கள் தீங்குரலாற்பாட, குவளைகள்விழித்துநோக்க ஒருநாடக சாலைபோலத் தோன்றும் சோலைகள் சூழந்துள்ளதாய்; அட்டிற்புகையும் அகிற்புகையும்வேள்விப்புகையும் மேகத்திற்சென்று மழையைக் கமழ்விக்கும் மாடமாளிகளுள்ளதாய்;பல தவமுனிவர்வாழும் மடங்களும் பலவகைமண்டபங்களும் மறைமுதற்பலகலைகளும் பயிற்றப்படும் பலகலாசாலைகளும், பார்ப்பனர் முதலியோரைப் பரிவுடன் உண்பிக்கும் அன்னசாலைகளும் இலகுவதாய், தென்மொழியும் வடமொழியும் முற்றுங்கற்றநாவலரும் பல்சுவையும் தோன்றப்பாடும் பாவலரும் தங்கப்பெற்றதாய்; வான்மதியைத்தாவும் கோபுரமதில்களையும், பலவிழாக்களையும்பெற்ற ஆதிகேசவப்பிரான் அமர்ந்தருளும் திருக்கோயிலிலகுவதாய்; பலராலும் கொண்டாடப்படும் * '**பூதபுரி**' எனவும் 'ஸ்ரீபெரும்பூதூர்' எனவும் வழங்கும் திருப்பதியில், '**ஸ்ரீ கேசவ ஸோமயாஜி**' என்ற பிராமணோத்தமருக்குத் திருக்குமாரராய், இராமகிருஷ்ணர்கள் முறையே கோசலை தேவகியர்களுடைய கர்ப்பத்தை விரும்பியவதரித்தமைபோன்றுபாலக் † **காந்திமதியம்மங்காரின்** கர்ப்பத்தை விரும்பி யடைந்து குணதிசையிற் சூரியன் உதிப்பதுபோல் இளையாழ்வான் அவதரித்தார்.

இவரது அவதாரம் - கலியுகம் - 4118க்கு [நாலாயிரத்து நூற்றுப்பதினெட்டுக்கு] மேலும், சாலிவாகன சகம் - 939க்கு [தொளாயிரத்து முப்பத்தொன்பதுக்கு] மேலும் சென்ற பிங்களவருஷம், சித்திரை மாதம், பன்னிரண்டாந்தேதி, சுக்கிலபக்ஷம், வெள்ளிக்கிழமை, திருவாதிரை, ஆயுஷ்நாமயோகம், பத்திரவாகரணம், கடகலக்கினம்—ஆகிய இச்சுபகாலமென்ப. இப்பொழுது கலிபிறந்து 5002 [ஐயாயிரத்து இரண்டு] வருஷங்களும்,சாலி

---

* பூதபுரி-பூதங்களால் ஏற்படுத்தப்பட்டதென்றும், பூதங்களை மிகுதியுங் கொண்டிருந்தது என்றுங் கூறுவர். ['பூதேசுவரர்' என்று ஆங்குள்ள சிவபிரானுக்கும் பெயர்வழங்குதலறிக.] இனி, '**பூதூர்**' என்ற தமிழ்மொழியே அங்ஙனம் வடமொழியாக உச்சரிக்கப்பட்டதெனவுங்கூறுநிற்பர்.

† காந்திமதி யம்மங்காருக்கு - 'ஸ்ரீ பூமிப்பிராட்டியார்' என்றும் பெயர் வழங்கும்.

வாசனம் 1823 [ஆயிரத்து எண்ணூற்று இருபத்து மூன்று] வருஷங்களும் ஆகின்றன. எனவே, இற்றைக்குச் சற்றேறக்குறைய 884 [எண்ணூற்று எண்பத்தினான்கு] வருடங்களாகும். என்றால், கிறிஸ்து பிறந்த 955 [தொளாயிரத்து ஐந்நூற்று ஆறு] வருடங்கட்கு மேல் என்க.

(இன்னும் வரும்.)

ஸ்ரீரங்காசாரியர்.

## * ஒழிவிலொடுக்கச் சிறப்புப்பாயிரவுரை.

வள்ளல் குருராயன் வாதுவென்ற சம்பந்தன்
வள்ளன்மலர்த் தாடலைமேல் வைத்துரைத்தான்—உள்ளத்
தழிவிலடுக் குந்தேனை யன்பரெலா முண்ண
வொழிவி லொடுக்கநூ லோர்ந்து.

இச்செய்யுள் கருதிற்றியாதோ வெனின், இந்நூன்முகத்து ஆசிரியர் பெயர் முதலியவற்றைக் குறித்து நிற்றலிற் சிறப்புப்பாயிர வொழுக்க முணர்த்தல் கருதிற்றென்க.

**வள்ளல் குருராயன் வாதுவென்ற சம்பந்தன் வள்ளன் மலர்த்தாடலை மேல் வைத்து** என்பது வள்ளலா ரென்னுந் திருப்பெயருடையவர் ஞானாசாரிய நிருபராகிச் சமயவாதிக டருக்கச் செருக்குகள் பிற்பட்டொழியப் பேரருணெறியான் வெற்றிகொண்டு சீகாழியென்னுந் திருநகர்க்கண்ணே மெய்ந்நெறிவிளங்க வீற்றிருந்தருளிய திருஞான சம்பந்தப் பிள்ளையாரது வள்ளற்றன்மையுடைய மலர்போலுந் திருவடிகளைத் தமது நன்முடிக்கண் ஓர் பொன்முடியாக வணிந்து.

**ஓர்ந்து உள்ளத் தழிவிலடுக்குந் தேனை யன்பரெலா முண்ண வொழிவி லொடுக்க நூலுரைத்தான்** என்பது அத்திருவடிகளின் அருட்டுணையால் தத்துவங்களைத் தஞ் சடமென்றோர்ந்து உணர்ந்து அவற்றைக் கடந்து தற்காட்சியோடு திருவருட்காட்சியுஞ் செய்து அங்ஙனம் வாதனைபான் அசைந்தெழும் போதம் தோற்றாது அதனை யத்திருவரு ளொளியின் அடக்கியாண்டு மேன்மேலுமெழாநின்ற சிவானந்தத் தேனைத் தாம் அநுபவஞ் செய்தவாறு அதன்கண் அன்புள்ள பக்குவருஞ் செய்தற்பொருட்டு அச்சிவானந்தாநுபவ அந்தரங்கமெல்லாம் வெளிப்பட்டு விளங்க ஒழிவிலொடுக்க மென்றோருபதேச முறையை யுரைத்தருளினர் என்றவாறு.

**வள்ளலென்னும் பெயர்**—ஆசிரியர்க்குத் தாம் முன்னிருந்த கிரியாசாரிய நிலைக்கண் அவ்வாசிரிய மரபின் வழித்தாய்வந்த காரண வபிடேகச்

---

* ஒழிவிலொடுக்கம் கண்ணுடைய வள்ளலார் என்பவராலியற்றப்பட்டது: இவ்வுரை திருவருட் பிரகாசவள்ளலா ரென்னும் வடலூர்-இராமலிங்கம் பிள்ளையவர்களாற் செய்யப்பட்டது.

சிறப்புப் பெயரென்க. அல்லதூஉம் பின்னர் ஞானாசாரிய நிலைக்கண் தமதருண்ஞான நோக்கான் இயைந்த கண்ணுடைய வென்னுங் காரண விசேடணமேற்கொண்டு நின்ற இவ்வள்ளலென்னும் பெயர் ஈண்டு அவ்விசேடணம் இசையெச்சநிலையி னிற்ப நின்றதெனினு மமையுமென்க. இஃது வினைபண்பு முதலிய அடுத்ததொகை நிலைச் சொற்றொடராகாது தொகா நிலையாய்த் தனைத்தொடர்பயனிலை யண்மைப்பொரு ளுணர்ச்சியின்றி இடையிட்டு நிற்கத் தான் செய்யுண்முதற்கண் தனித்திருந்தமையின் ஆற்றலின்றாலோவெனின், அற்றன்று; கொடைமடங்குறித்த குணங்காரணமாகவந்த இவ்வள்ளலென்னும் பெயர் தன்னுறுப்புகளுட் கொடை குணம் புகழ் அழகு வளமென்னும் நல்வகைகுறித்த பல்பொருட்பகுதியான் வண்மை யென்னு முதலுறுப்பான் ஆசிரியர்க்குளவாய அக்கொடை முதலிய அருட்குணங்களைக் குறிப்பிற் புலப்படவிரித்தலின் பொருளாற்றலுண்டென்க. அல்லதூஉம் இப்பெயர் உயர்பொருட்கிடனா யுடனிலைக்கூட்டாய் ஒரு நெறியசைத்தா யோரினந் தழுவிப் பல்வகைக் குறிப்பிற்படர்ந்து மூற்றியைபுவண்ணப் பெருஞ் சொல்லாக நிற்றலின் சொல்லாற்றலு முண்டென்க.

ஆயின் இவ்வாசிரியர் பெயர் இச்செய்யுளின் இடைகடைகளின் ஒன்றில் நிறுத்தாது முதலடி முதற்சீர் எதுகைத்தொடைக்கண் நிறுத்ததிற் குறித்து யாதோவெனின், ஒன்றிரண்டெனக்கொண்டுறுமறை யாகம நன்றிரு முடிபினடுநிலை நடாஅய்ப் பலம்பெறுதத்துவ நியதியிற் போந்துண் மலந்தெறு மறிஞர் வாழ்த்திப்பரவும் ஆசிர்யர் சன்மார்க்க முதலியமார்க்க நான்கனுள் தலைமையிற்றலைமையாய உத்தம சன்மார்க்கத்தின ரென்பது குறித்ததென்க. இங்ஙனம் உத்தம சன்மார்க்கத்தினர் என்பதை ஆசிரியர் கூறிய "இது வென்றதெல்லாம் பொய்யென்றா" னென்னுந் திருவெண்பாவாற் காண்க.—இஃதின்னும் விரிக்கிற் பெருகும்.

**குரு ராய**னென்பது - திருஞான சம்பந்தப் பிள்ளையார்க்குச் சிறப்பிற் சிறப்பாய காரணப்பெயராய் நின்று, ஓதியுணர்ந்து பன்னாட் பலசாதனங்களின் முயன்று முயன்று ஆசாரியத்தன்மை யொருவாறு அரிதிற்கிடைப்பப் பெற்றும் ஓரோர் காலங்களில் அவத்தைவயப்பட்டு மயங்கும் மற்றையாசாரியர் போலாது ஓதாமல் வேதாகமாதிகளை முற்றுமுணர்ந்து இறைப்போதும் ஓர் சாதனங்களின் முயன்றதின்றி ஞானாசாரிய அருளிலக்கணங்களைத்தும் தாமே தம்பானிரம்பிநிற்ப அமர்ந்தன ரென்பதூஉம், ஓதியுணர்ந்த அவ்வாசாரியர்க்கெல்லாம் அவரவ ரறிவின்கண் அருளுருவாய் நின்றறிவித்தும் ஆசாரியவுருவாய் வெளிநின் றநுக்கிரகித்தும் நின்றன ரென்பதூஉம், திருநோக்கஞ்செய்தன் முதலிய அறுவகைத் தீக்கையானு மன்றித் தமது திருவுருவைக்காண்டல் நினைத்தன் மாத்திரையே பக்குவரல்லாரும் பக்குவராய்ப் பயன்பெறநின்ற திருவருட் பெருமையரென்பதூஉங் குறித்ததென்று

ணர்க. இங்ஙனம் ஓதாமல் வேதாகமாதி யுணர்ந்தமை முதலிய வற்றை ஆசிரியர்கூறிய "தன்மையு முன்னிலையு" மென்னுந் திருவெண்பாவாற் காண்க.

அல்லதூஉம், குருராயனென்பது வாதுவென்ற சம்பந்தனென்பதற்கு மேனிற்கவைத்த விதப்புக்குறிப்பாற் பிள்ளையார் இவ்வவதாரத்தின் மேனின்ற வவதாரத்தினுங் குமார சற்குருவாய் அரனார்க்கும் அகத்தியனார்க்கும் உபதேசித்தருளிய ஆசாரியத்தலைமையுங் குறித்ததெனக் கொள்க.

அருணகிரிநாதர்.

தென்ன வனங்கனஞ் சூழ்காத் திரிநக சூலகரத்
தென்ன வனங்கனந் தப்பத நீட்டினன் செல்வமுன்பின்
றென்ன வனங்கநன் னீற்றூற் றிருத்திய தென்னவின்னந்
தென்ன வனங்கனங் கைச்சிலைக் கூனையுந் தீர்த்தருளே.

என்றதனாற் பிள்ளையா ரிவ்வவதாரத்திற்கு மேனின்ற வவதாரத்திற் குமார சற்குருவென்பது காண்க.

கல்லாடம்.

உழன்மதிற் சுட்ட தழனகைப் பெருமான்
வணங்கிநின் றேத்தக் குருமொழி வைத்தோய்
குறுமுநி தேற நெடுமறை விரித்தோய்.

சித்தியார்.

அருமறையா கமமங்க மருங்கலைநூ றெரிந்த
வகத்தியனுக் கோத்துரைக்கு மருட்குருவாங் குருவை

என்பவைகளா லரனார்க்கு மகத்தியனார்க்கு முபதேசித்த வாசாரியத் தலைமையையுணர்க.

ஆயின் குருவேந்தனென்னாது குருராயனென்றது எதுகுறித்தற்கோவெனின் நான்கன் வேற்றுமையானடுத்து மிக்குயர் நெறிப்பொருண்மையின் வந்த காரகச் சிறப்பொருதலைத் தொடர்மொழிப்பெயராய இக்குருராயனென்பதன்கட் குருவென்பதன் முதனிலை யெழுத்துத் தமிழியல் விதிப்படி மொழிக்கு முதலாகியும் ராயனென்பதன் முதனிலை யெழுத்துத் தமிழியல் விதியின்றி யாரியவியல் விதிப்படி மொழிக்கு முதலாகியும் வந்து இருவகை யியலுங் கோடலின் இதனைத் தம்பெயராக வுடைய பிள்ளையாருந் தமிழ்நூல் வடநூலென்னு மிருவகைநூற்கு முரியாரென்பது குறித்தற்கென்க. ஆசிரியர் "மறைப்புலவன் றமிழ்க்குரிசில் சீகாழிச்சம்பந்த" னென்றதனு மிருவகைநூற்கு முரியாரென்பது காண்கவென்க. அல்லதூஉம், பொருள் வேறுபடாது சிறிதே வடிவு வேறுபட்டு நின்ற குருராயனென்பது தன்னையுள்ளூன்றி நோக்கினர்க்கு இலைமறை காய்போல் ஜாவென்னுமுயிர் மெய்யோடிருந்த தன் முன்வடிவம் உட்கொண்டு விளங்கக்காட்டி நிற்கின்ற தாக

லின் இதனையுடைய பிள்ளையாருந் தமது கடவுட்டன்மை வேறுபடாது உத்தமபுருட வுருவங்கொண்டு நின்றதம்மை யன்பான் உள்ளூன்றி நோக்கினார்க்குக் குமாரசற்குருவென்னும் பெயர்கொண்டு அளவிகந்த சூரியருதயம் போன்று ஒளி வீசுந் தம் முன்னுருவாய தெய்வத் திருவுரு வுட்கொண்டு விளங்கக்காட்டி நின்றன ரென்று குறித்தற் கென்பதுமாமென்க.

ஆளுடைய பிள்ளையார் புராணம்.

மறையவர் திருவே வைதிக நிலையே வளர்ஞானப்
பொறையணி முகிலே புகலியர் புகலே பொருபொன்னித்
துறைபெறு மணியே சுருதியி னொளியே வெளியேவந்
திறையவ னுமையா ளுடனரு டரவெய் தினையென்பார்.

என்று மூவாண்டிற் பிள்ளையார் திருவருள் வடிவைக்கண்டு சீகாழியுள்ளார் வியந்து கூறியவாறுமாய இச்செய்யுளால் உள்ளூன்றி நோக்கினார்க்குத் தம் முன்னுருவைக் காட்டி நின்றனரென்பது காண்கவென்க.

இனி யின்றியமையாக் * காட்டுளதேற் காட்டுவதன்றி மற்றையவு விரிக்கிற் பெருகுமென்க.

அல்லதூஉம், குருவென்பதன் ஈற்றுயிர் மெய்யோடு ராயனென்பதின் முதலுயிர்மெய் புணராப் புணர்க்கையாய் நின்ற தாகலின் இங்ஙனம் ஆனந்தவடிவராகிய பிள்ளையாருந் தாங்கொண்டருளிய மானிடத்திருவுருவோடு புணராப் புணர்க்கையாய் நின்றனரெனக் குறித்தற் கென்பது மாமென்க.

அல்லதூஉம், குறிலிணைக்கெதிர் நெடில்குறி லெண்ணீடாக நிற்பவும் ஈற்றினவ் வெண்ணீடின்றி யொற்று நிற்பவுந் தொடர்ந்த மொழியாகலிற் பிள்ளையாரும் பக்குவர்க்கு மறைப்பொருளாயு மதிபக்குவர்க் கநுபவப் பொருளாயு நின்றனரென்று குறித்தற்கென்பது மாமென்க. இங்ஙனங் குருராய னென்பதிற் குவ்வென்பது இருள் ருவ்வென்பது அருள் ராயனென்பது விளங்கச் செய்கின்றோன் பொருளாம், இதனால் குவ்வென்னும் அசுத்தாவத்தையில் நின்றோரை ருவ்வென்னுஞ் சுத்தாவத்தையில் தாம் நின்றவண்ண நிறுத்துகின்றோர் குருவாவர். இச்சுத்தாவத்தைக் காதாரணாகியும் அதீதனாகியும் விளங்கி யிவ்வவத்தையினின்றும் அக்குருவாயினோர் தாமாதவண்ணம் அருள்செய்து நின்று அதீதப்படுத்துகின்றோன் ராயனாவன் ஆகலின் இதனனு முணர்கவென்க.

எழுத்தாதிப் பல்வகைக் குறிப்பிற் பொருணெறிப்பற்றி நின்ற நோக்கம் செறிவு நுட்பம் இங்கிதம் இன்பம் கம்பீரஞ் சிறப்பு உறுதி முதலிய நற்குணந் தழீஇய சொற்புணர் ஈதென்றே ஆசிரியரும் "சரிதாதி நான்கினுக்கு" மென்னுந் திருவெண்பாவி னிடைக்கண் குருராய னென்றிதன் பெருமைதோன்ற வைத்தனரென்க. இஃதின்னும் விரிக்கிற் பெருகுமென்க.

---

* காட்டு=உதாரணம்.

வாதுவென்ற சம்பந்த னென்பதிற் பொதுவானே வாதுவென்ற என்றது என்குறித்தோவெனின், எண்வகைக் குன்றத் தெண்ணாயிரவராய பாயுடுக்கைப் பறிதலைச் சமணர்கள் ஒருங்கே கூடித் தென்மதுரைக்கண் செந்தமிழ்ப் பாண்டியனை முன்னிட்டுச் செருக்காற் செய்த சுரவாதம் அனல் வாதம் புனல்வாதங்கள் பிற்படத் திருநீற்றானுந் திருவாக்கானும் வென்று திறல்கொண்டமை யன்றியும் பரசமயகோளரி யென்று தானே யொலித்த திருச்சின்னத்தின் தெய்வப்பேரொலி கேட்டு உளம் பொறாது எதிரிட்டு மறித்த போதமங்கைப் புத்தநந்தியின் பொய்த்தருக்கமும் புழுத்தலையும் பொடிபட்டழியவும் பின்னர் உள்ளது போன்று இல்லதைப்பற்றிச் சாக்கியக் குழுவுட்டலைவனாப சாரிப்பத்தன் சிற்சில வகையாற் செய்த சமயவாதந் தலைதடுமாறவுஞ் செந்தமிழ் வேதத் திருமுறை தாங்கி மேம்படுமறிஞரான் வெற்றிகொண்டமையும் திருவோத்தூரின்கண் அரனுக் கிடுபனை யாண்பனையாயிற்றேயென் றசதியாடிய வமணக்குழூஉக்களின் வாய்வாதங்கண் மண்பட்டொழியத் தாம் திருவாய் மலர்ந்த திருக்கடைக் காப்புள் ஓர் மொழியானே அவ்வாண்பனை பெண்பனையாகச் செய்து விறல்கொண்டமையுங் குறித்ததென்க.

அல்லதூஉம், வாதென்பது இலக்கணையாகக்கொண்டு பெருமண நல்லூரின்கட் டிருமண நல்விழாவைத் தரிசிப்பான் வந்த மக்கட் கெல்லாந் தொன்றுதொட் டிடைவிடா தடனிழற் போற்சூழ்ந்துள பிறவிப் பெருவாதுகளனைத்தும் வென்றதூஉம், திருப் பாச்சிலாச்சிராமத்தின்கண் மழவன் மகளார்க்கடுத்த முயலகவாது வென்றதூஉம், மருகற்கண் ஓர் வசியனுக்கடுத்த விடவாது வென்றதூஉம், இவை முதலியவுங் குறித்த தெனினுமாமென்க. வெற்றிகொண்ட பொருட்டிறன் முதலியவற்றா னொன்றேனுந் தோன்றக் கூறாது இலேசானே வாதுவென்றது என்றது என்குறித்தோ வெனின் பிறர்க்கு இங்ஙனம் வேறல் தம்மானுந் துணைமையானும் பற்பலநாட் பற்பலவகையின் முயற்சி செயினு முற்றாதெனினும் பிள்ளையார்க்குச் செந்தமிழ் பொழியுந் திருவாக்கானே யாண்டாண்டு அவ்வேறல் முற்றியதென்பது குறித்தென்க. வாது என்பது குருராயனென்பதனோடுஞ் சம்பந்த னென்பதனோடுஞ் சாராது நடுநின்றமையின் அத்துவித நெறியினுஞ் சேராது துவிதநெறியினுஞ் சாராது நின்ற பதிதவாதிகளது பயனில்வாத மெனினும் அமையுமென்க. எதிரேற்கப்பட்டு எதிர்வினை கீழ்ப்பட மேற்கொள்வினை யெழுச்சிப்பொருளின் வந்த வெல்லென்னும் பிறவினைப் பகுதியானடுத்த வென்றவென்னும் பெயரெச்சஞ் சம்பந்தனென்னும் பெயர் கொண்டு முடிந்து இங்ஙனம் வெற்றிகொண்ட பருவம் பிள்ளையார்க்கிளங் குமாரப்பருவமெனக் குறித்ததென்க. என்னை? எச்சமென்ப திளஞ்சேய் மேற்றாகலின்

சம்பந்தனென்பது பிள்ளையார்க்கு மூவகவைக்கண் மூவுலகும் புகழப் பொற்பொடு புணர்ந்தவற்புதத் திருப்பெயராகலின் ஆண்டுப் பெருமான் அருளப் பிராட்டியாரளித்த சிவஞானத்தெள்ளமுதருந்தி அச் சிவஞானத்திற்குரிமைபூண்டமை குறித்ததென்றுணர்க. ஆயின், சிவஞான சம்பந்தனென்னாது சம்பந்தனெனவைத்தது என்கொலோவெனின், சிவஞானத்திற்கும் அன்றிச் சிவானந்தம் ஆனந்தாதீதமென்பவைக்குமுரிமைபூண்ட தலைமைபற்றியும், அவற்றை யுலகுயிர்க் கிங்ஙனமென் றுணர்த்தியுரிமை செய்விக்குமாட்சிபற்றியும் அங்ஙனம்வைத்ததென்க. அல்லதூஉம், சுருங்கச்சொல்லுதல் வனப்பினாற் சம்பந்தனெனவே சிவஞான சம்பந்தனென வுரிமைச் சிறப்பு வழக்கால் தானே தோன்றுமெனவைத்ததெனினுமாமென்க. எங்ஙனமெனின், இந்திரனென்பது இறைமைச்சிறப்பு வழக்கால் தேவேந்திரனையும், உடையானென்பது பொருட் சிறப்பு வழக்காற் பொன்னுடையானையுங் குறிக்குமாகலினென்க.

**வள்ளன் மலர்த்தா** ளென்னும் ஒருவகைவனப் பிருவகைச் சந்தி மூவகைமொழித் தொகைச் சொற்றொடர்க்கண் வள்ளலென்னுங் குணப்பெயர் வினைமுதற் றொழிற் பயனுறப்படு முடைமைக் குணப்பெயராய் நின்று பிள்ளையாரது திருவடிகள் தம்மையடைந்தோர்க்கு வரையாதானந்தப் பேற்றையளித்து அவரைத்தாங்கிக் கோடலைக் குறித்ததென்றுணர்க.

அஃதேல் ஆநந்தப்பேற்றைத் தருசற்குந் தாங்கிக்கோடற்குங் கருத்தர் பிள்ளையாரன்றே அங்ஙனமிருப்பத் திருவடிகட் கிங்ஙனங்கூற லெங்ஙனமெனின் திருவடிகள் தம்மை வழிபடுவோர்க் கிரங்கி யின்பமீதற்பொருட்டு எழுந்தருளும் பிள்ளையாரது படர்ச்சி நிகழ்ச்சிக் கருவியாய் நின்று அவரை யவ்வழிபடுவோர்பால் வருவித்தலானும், ஞானதிக்கை பண்ணுங்கா லவர் சென்னியிற் சூட்டப்பட்டு ஐக்கியம் வருவித்தலானு நித்தியானந்தப் பேறுவாய்க்குமாகலி னிங்ஙனமென்ச.

அல்லதூஉம், வாட்டமிலருளுங் கோட்டமில் குணனும் அசையாநிலையுநசையாமனனும் வெகுளாப்பண்பும் விடாப்பேரன்புஞ் செவ்வியின்மரீஇ யெவ்வெவரெவ்வகை வேட்டனரவ்வகை விருப்பொடு குறிப்பின் வரையாதீதல் வள்ளற்றன்மை என்பவாகலி னிவ்வள்ளற்றன்மையைத் தம்பாலடைந்தோரிடை யடைவித் தருளுங் கருணைபற்றி யங்ஙனங் கூறியதெனினுமமையுமென்க. அஃதேல் வள்ளற்றன்மை வழங்கும் மலர்போலுந் திருவடியென்றன்றோ வுரைவிரித்தல் வேண்டு மங்ஙனமின்றி வள்ளற்றன்மையுடைய மலர்போலுந்தாளென விரித்திருக்கின்றதேயெனின் அங்ஙனமடைவித்தலும் வள்ளற் றன்மையே யாகலினும் உடைய தொன்றன்றே யுதவப்படுமாகலினும் இங்ஙனம் விரித்தலங்ஙனங் கூறற்கு மமைதியாமென்க.

அல்லதூஉம், அருளின்றியமையாத வள்ளற்றன்மைக் கவ்வருளே முதற் காரணமாமாகலின் ஆனந்தவடிவராகிய பிள்ளையா ரவ்வானந்தப் பேற்றை யளிக்கும் வள்ளற்றன்மைக்கு முதற்காரணமாகிய திருவருட் சத்தியே திருவடியென்று குறித்தற்குக் காரணத்தைக்காரியமாக ஈண்டுபசரித்த தெனினுமமையுமென்க.

அல்லதூஉம், எமது திருவடிகளை வழிபடின் வீட்டின்ப மெளிதிற்றருவேமென்று பிள்ளையார் விதித்தருளிய வருள்விதிப்படி யறிந்து வழிபடின் அவ்வழிபாட்டா னவ்வீட்டின்பந் தரப்பெறுத லுண்மையாகலி னவ்வுண்மை நோக்கி யீண்டுக் கூறியதெனினும் பிள்ளையார் திருமேனி முற்றுஞ் செய்வத்தன்மைபூரணமாகலின் அதனையறிவிக்க ஈண்டுக்கூறியதெனினுமமையுமென்க. திருவடிகட்கு அடையாய வள்ளலென்பதூஉம், ஆசிரியர் பெயராய வள்ளலென்பதூஉம், அடியிணை எதுகைத் தொடையாய் எழுத்தசை சீரொலி பொருளாதிகளா னொற்றுமைகொண்டு நின்று பிள்ளையாரது திருவடித்தீக்கைக்கும் ஆசிரிய ரதிபக்குவத் தன்மைக்கு முள்ள ஒற்றுமைப் பொருத்தம் விளக்கின வென்க. (இன்னும் வரும்.)

---

## கட்டுரைத் தொகுதி.

---

### I. புத்தகங்கள்.

ஆங்கிலர் துரைத்தனத்தின் பயன்களுள் முக்கியமானதும் மேன்மையானது மாகிய புத்தகங்களை யாவரும் எளிதிலடைந்து இன்பமடையலாகும்.

புத்தகங்கள் தாம் கோபித்துக்கொள்ளாமலும், அடியாமலும், வையாமலும் கற்பிக்கும் உபாத்தியாயர்கள். அவைகளை நெருங்கினால் உறங்கார்கள். அவைகள் அரிய பொருள்களை எல்லோருக்கும் ஒரே தன்மையாய் மறையாமல் வெளிப்படையாகப் போதிக்கும். புராதன பண்டிதர்களை யொப்ப ஓர் அரியநூலின் பொருளைத் தம் மாணாக்கர்களுக்கும் சொல்லாமல் மறைப்பதில்லை. தம்மினும் மேன்மையராவர் என்னும் பயம் இவர்களிடத்தில்லை. புத்தகங்கள் தாம் கூறும் பொருள்களை மாறாகக்கிரகித்தால் பரிகாசம் செய்யாது. அவரவர்கள் நிலைமைக்கேற்ற புத்தகசாலை வைத்துக்கொள்வதே நலம். அத்தகைய புத்தகசாலையின் ஏற்றம் இத்தகைத்தென்று மதித்தல் முடியாது.

படிப்பிற் பிரியமுள்ளயாவரும் புத்தகங்களே உண்மையான நண்பர்களென்று சொல்லுவார்கள். அத்தகைய நண்பர்கள் எக்காலத்தவரும் எத்தேயத்தவருமாயிருப்பார்கள். இந்நண்பர்களை இஷ்டமிருந்தாற் பாராட்டலாம். இல்லாமற்போனால் நீக்கிவிடலாம். சில நண்பர்கள் பழைய காலத்துச் செய்திகளையும், இயற்கையரசியின் இரகசியங்களையும், சிலர் எவ்வாறு

உய்வதென்பதையும், எவ்வாறு இறப்பதென்பதையும், சிலர் நீடித்தவாழ்வை எவ்வாறு அடையாலாகு மென்பதையும் கற்பிக்கின்றார்கள்.

எத்தகைய துக்கத்தையும் போக்குவதன்றியும் புத்தகங்கள் சந்தோஷத்தைமேன்மேலும் உண்டாகச் செய்கின்றன. கவிமாரி பொழியுங் கம்பர், திருவள்ளுவர் முதலாயமேகங்களை நாம் பிரியப்பட்டபொழுது வார்த்தையாடச் செய்வது எவ்வளவு ஆச்சரியம்!

மேலும் புத்தகங்களோ யௌவன பருவத்தில் நன்னடக்கையை யுண்டு பண்ணும்; வயோதிகபருவத்தில் காலத்தை யினிமையாகச் செலவழிக்கச் செய்யும்; தனிமையின் கொடுமையினைத் தவிர்க்குந் தயாநிதி. மிகவுந் திறமையுற்ற புராணிகன் ஒருவன் ஸ்ரீமத் ராமாயணத்தைப் பிரசங்கித்தால் ஸ்ரீ ராமனது துக்கசுகத்தைத் தமவெனப்பாவித்துச் சனங்கள் அவைகளை யடைகின்றார்கள். வருத்தமில்லாத பயத்தைக் கொடிய செயல்களைப்பற்றிக் கூறும் புத்தகங்கள் நம்மனத்தில் விளைக்கின்றன. நல்ல புத்தகங்களுள்ள இடமே சகல கலாசாலை.

நாம் படிக்கும் புத்தகம் மிகவும் இனிமையாக விருந்தால் உண்ணவும் எழுந்துசெல்ல மனம் வருவதில்லை. முற்காலத்தில் ஏட்டுச்சுவடிகள்தாம் கிடைக்கும். அச்சுவடிகளை மிகவும் விலைகொடுத்து வாங்கவேண்டும். அன்றியுஞ் சில வித்துவான்களிடத்தேதாம் ஏட்டுச் சுவடிகள் கிடைக்கும். அவர்கள் உயிர்போனாலும் அவைகளைப் பிறர் பார்த்துப் படிக்கவும் வேறு பிரதி செய்துகொள்ளவும் மனமொவ்வார்கள். இத்தகைய பண்டிதர்களின் கொடுமதியால் அனேக அருங்கலங்களை நம் தமிழ்மாது இழந்தனள்! இதற்காக நாம் அனைவரும் இரங்கவேண்டி யிருக்கின்றது.

புத்தகங்களில்லாதவறையை உயிரில்லா உடலெனப்பாவிக்க வேண்டும். உலக சரித்திரங்களைப் படித்தலால் ஒரு சிறுவன் நரை மூப்பு இவைகள் இல்லாமல் வயோதிகனாகின்றான். வயோதிக பருவத்தால் உண்டாகும் அநுபவம் எளிதிற் படிப்பினால் அடையலாகும்.

படிப்பினால் மேன்மையடைந்த வொருவனது சாதிகுலத்தை யாவரும் கவனியார். கல்வியினால் அடையும் கவுரவம் பொருள் முதலியவற்றால் அடையும் மேன்மையினும் பாராட்டத்தக்கது.

பயனற்ற நூல்களைப் படித்தல் தீய நண்பர்களுடன் பழகுவதைப் போலும். மேலானநம் கொள்கைகளையெல்லாம் மாற்றித் துன்பத்தை யடைவிக்கும். நண்பர்களை யாராய்ந்து கொள்ளல் போற் புத்தகங்களையும் ஆய்ந்தெடுக்கவேண்டும். கண்ட புத்தகங்களைப் படித்தல் கூடாது. இப்புத்தகங்கள் தாம் படித்தல் வேண்டுமென்று கூறுதல் இயலாது. எத்தகைய புத்தகங்கள் நம் மனத்திற் கின்ப மளிக்குமோ அத்தகையபுத்தகங்களையே தேடியெடுத்துப் படிக்கவேண்டும்.

நாம் செய்யவேண்டிய கடைமைகளை விட்டுப் புத்தகங்களையே சதாகாலம் வாசித்தல் கூடாது. அப்படிச் செய்தால் நகரங்களைத் தீயிற் படுத்த பிறகு கைப்பற்றுதலை யொப்பமுடியும். இது ஷேக்ஸ்பியர் அபிப்பிராயம்.

புத்தகங்களிற் சிலவற்றை மிகவுங் கவலையாகப் படிக்கவேண்டும். அதிற் கூறிய பொருள்களை நம்மனத்தில் சிந்தித்துத்தெளியவேண்டும். சிலவற்றைக் களைத்தபொழுது மேலாகப் படித்தல்வேண்டும். சில நூல்களிலெல்லாவற்றையும், எல்லா நூல்களிற் சிலவற்றையேனும் படித்தறிதல் முக்கியம். நாம் ஓர் இடத்திலிருப்பினும் பல இடங்களிலும் சஞ்சரிக்கலாம். வேதாந்த நூல்களை யாம் ஆராயப்புகுந்தால் கனவின் தன்மையை யொக்குமேனும் மேலுலகத்தை எளிதிலடையலாகும். செல்வரும் வறியரும் பேதமின்றி நூல்களின் செல்வத்தைப் பகிர்ந்து கொள்ளலாகும். ஒரு புத்தகசாலையைச் செவ்வனே உபயோகித்தால் இந்திரன்றன் இனியவாழ்க்கையையும் விரும்ப மாட்டோம்.

## II. தேசசஞ்சார வின்பம்.

"பார்த்த வனைத்தின் பகுதி யானே"

தேசசஞ்சாரஞ் செய்யச் சாதகங்கள் நம்முன்னோரைப் பார்க்கினும் நமக்கு அதிகமாயுள்ளன. முற்காலத்தில் மாட்டுவண்டிகளிற் பிரயாணஞ் செய்யவேண்டி யிருந்தது. கள்வரால் நேரும் பயம் அக்காலத்தே அதிகம். இதனாற்றான் நம்மவர்க்குத் தேசசஞ்சாரத்திற் சிறிதும் பிரியமில்லை. மேன்மையான ஆங்கில துரைத்தனத்தால் இருப்புப் பாதைகள் ஏற்பட்டிருக்கின்றன. இப்பொழுது குறைந்த பணங்கொண்டு பல தேசங்களையும் சுற்றிப் பார்த்லியலும்.

தேசசஞ்சாரத்தாற் பயனடைய வேண்டுமாயின் சிலர் நடந்தே செல்லல் வேண்டு மென்கிறார்கள். இருப்புப்பாதையில் ஒரு தேசத்தினின்று மற்றொரு தேசத்திற்குச் செல்வோமாயின் இயற்கையரசியின் எழிலினையும், முக்கியமாய்க் காணவேண்டிய விநோதங்களையும் பார்க்க முடிவதில்லையென்கின்றார். தேசசஞ்சாரஞ் செய்பவர்பிழையை இருப்புப்பாதை மேலேற்றிப் புகைவண்டியாற் பயனில்லை யென்னலாகாது. இவைகள் வருத்தமின்றிப் பணச்செல வதிகமில்லாமல் நம் முன்னோர்கள் கேட்டுமறியாத தேயங்களை யதிசீக்கிரத்திலடையச் செய்விக்கின்றன.

விநோதார்த்தம் தேசசஞ்சாரஞ் செய்யச் சக்தியுள்ளவர் வீணேகாலத்தைக் கழிக்கக்கூடாது. எவன் உலகத்தைக் காண்கின்றானோ அவனுடையது இவ்வுலகம். தேசசஞ்சாரத்தால் இன்பமடைய வேண்டுமாயின் முதலிற்றான் சந்தோஷ மடையவேண்டும்.

புத்தியற்ற மாந்தர் பயனின்றித்திரிவார்கள். பெரியோர் தேசசஞ்சாரஞ் செய்வார்கள். ஒரு பட்டணத்தை யடைந்தும் பார்க்கவேண்டிய

பொருள்கள் யாவெனச் சந்தேகஞ் சனிக்கும். அரசர்கள் காரியாசனத்திருத் தலையும், நியாயஸ்தலங்களையும், கோயில்களையும், இறைவன் திருவாபரணங் களையும், கோட்டைமதில் முதலியவைகளையும், துறைமுகங்களையும், ஐதிக முற்ற விடங்களையும், விசித்திரமான தோட்டங்களையும், அவ்வத்தேசத்தவர் விரும்பும் வேடிக்கைகளையும், அவர் நடையுடை பாவனைகளையும், அவர் நாட்டியசாலைகளையும், நடிக்கும் முறைமையையும், கல்விச்சாலைகளையும், படிப்பிக்கு முறைமைகளையும், இன்னு மிவைபோல்வன வற்றையும் கவன மாய்ப் பார்க்கவேண்டியது அவசியம்.

நாம் போகும் ஒவ்வொரு நகரத்திலு மிவ்வளவையும் பார்க்கவேண்டு மாயின் சிறிது பிரயாசை யெடுத்துக்கொள்ளவேண்டி வரும். நாம் செல வழிக்கக்கூடிய சகலத்தையும் பொருளையும் யோசித்தே முற்கூறியவைகளைப் பார்த்தல்வேண்டும்.

தேசசஞ்சாரத்தால் மனமகிழ்ச்சி யடைவதுடன் நோயற்ற வாழ்வையு மடையலாகும். புத்தகங்களிற் பல தேசங்களின் வர்ணனைகளைப்படிக்கலாம். தேசசஞ்சாரஞ்செய்ய வேண்டியதில்லை யென்று சிலர் கூறுவார்கள். எப்படி ஒரு சித்திரத்தின் மூலம் சித்திரத்தினும் மேன்மைத்தோ அப்படி வர்ணனை களைவிட வர்ணியங்களை நேரிற் போய்ப்பார்ப்பதால் நன்மையுண்டாகும். குற்றாலத்தருகே மலையருவி வீழ்ச்சியைப்பற்றிய வர்ணனையைப் படித்தலா லெய்தும் மகிழ்ச்சியும் நேரிற்காண்டலால் அடையும் மகிழ்ச்சியும் சரியா மோ? ஒருகாலும் ஆகா. புத்தகங்களிற் கூறிய வர்ணனைகளைப் பார்த்த பிறகு வர்ணியங்களை நேரிற் கண்டால் நம்கவனமானம் முற்றும் அப்பொரு ளின் மேலேயே செலுத்த முடியும். நேரிற்கண்டவர் வர்ணனைகளைப் படித் தால் அவைகளைப் பற்றிய இனிய வெண்ணம் ஞாபகப்படுத்தப் படுகின்றது.

ஆறுகளை நோக்குவதனு லுண்டாகும் மனவெழுச்சி இனைத்தென்று சொல்லுதல் முடியாது. காவிரியின் யாற்றிடைக்குறையிற்றுயிலும் அரங்க னது திவ்விய நகரத்தை யடைந்து காவிரி கொள்ளிடம் ஆகிய இவைகளின் ஆற்றங்கரையில் உட்கார்ந்தனுபவிக்கு மின்பம் இத்தகைத்தென்று கூறுத லும் முடியுமோ?

சில தீராநோய்கள் ஒரு தேசத்தினின்றும் மற்றொரு தேசத்திற்குப் போவதனுல் தீருகின்றன. இஃது அனுபவ முறையிற் கண்டது.

இனித்தேசசஞ்சாரஞ் செய்யுமாறு எகும் இளைஞரிற் சிலர் அவ்வத்தே சங்களின் தீய நடவடிக்கைகளை மேற்கொண்டொழுகுகின்றனர் என்று சிலர் கூறுகின்றார்கள். எப்பொழுதும் தீமையும் நன்மையுங் கலந்தே யிருக் கும். புத்திமான்களே தீமையை யொழித்து நன்மையை மேற்கொள்வார். ரோஜாமலரைப் பறிக்கவேண்டுமானுற் கிளைகளில் முட்களிருக்கின்றன வென்று பறியா தொழிதல் மூடத்தனமன்றோ?

தேசசஞ்சாரஞ் செய்யாதவர் தம் நாட்டில் இன்பமடையார். நிழலி னருமை வெய்யிலிற் சென்ற பிறகே தெரியுமாபோல வேறு நாடுகளைக்கண்ட பிறகே தம் நாட்டிற் சுகம் மாந்தர் அடைவார்கள்.

சீதாபதி.

---

## புத்தகக் குறிப்புகள்.

---

**நீலா** :—இப்பெயர் வாய்ந்த புத்தகமொன்று நமது பார்வைக் கனுப்பப் பட்டது. இது அருணசலய்யரென்பவராலாயது. இதை நாவல் என்று கூறுதல் பொருந்தாது. ஒரு தமிழ்க் கதையென்றே சொல்லவேண்டும். இக்கதை படிப்படியாய் வளர்ந்திலதாயினும் படிப்போர்க் கொருவகை யின்பமளிக்கும். இப்புச்சகத்திலாங்காங்கு சில சொற்பிழைகளு மெழுத்துப்பிழைகளும் பொதிந்து கிடைத்தலால், "மேலுமேலு மிவ்வழியே முயற்சிசெய்ய," விரும்புமையர் இனியாகிலும் கவனித்துத் தக்க பண்டிதர்களி னுதவிபெற்று நல்வழிப்படுவாரென்று நம்புகிறோம்.

**விவேகபாநு** :—இப்பெயரிய மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை யொன்று திருநெல்வேலி ஜில்லா தூத்துக்குடியில் ஸ்ரீ கணபதி யானந்தசுவாமி யென் பவரால் சென்ற மாசந்தொடங்கிப் பதிப்பிக்கப்பட்டு வருகின்றது. இப்பத்திரிகையின் இரண்டாம் புத்தகம் நமது பார்வைக்கு அநுப்பியதற்காகப் பத்திராதிபர்க்கு வந்தன மளிக்கின்றோம். இதில் முக்கியமாய் மதவிஷயத்தினைக்குறித்துப் பற்பல மதத்தினர்க்கும் உடன்பாடானவற்றை யெடுத்துத் தெள்ளிய நடையில் கற்றோரும் மற்றோரும் அறிந்து ஆனந்தங்கொள்ளுமாறு எழுதப்பட்டுவருகிறது. இத்தகைய பத்திரிகையொன்று எப்புறமும் சென்றுலாவவேண்டுவது ஆவசியகமே. இதற்குரியோரனைவரும் இடைவிடாமல் முயன்று இது நாடோறும் விர்த்தியடையத்தக்க ஏற்பாடு செய்வார்களென நம்புகிறோம்.

---

## சமாசாரக் குறிப்புகள்.

---

**ஞானபோதினிப் பதிப்புகள்** :—ஞானபோதினியி லவ்வப்போழ்து தோன்றும் விஷயங்களைச் சிறுநூல்களாகப் பிரசுரஞ் செய்யுமவசியம் நேரிடின் அவை யிப்பெயரானழைக்கப் படும். இது முந்தித்தோன்றியது இது பிந்தித்தோன்றியது என்று அறியும்படி அவற்றிற்கு எண்ணமுந் தரப்படும். இப்பொழுது **பர்த்துருஹரி, தமிழ்க்கவி சரிதம்** என்னும் நூல்கள் பதிப்பிக்கப்பெற்று வருகினறன. வெளிவரும்போது பர்த்துருஹரி முதலெண்ணமாயும், தமிழ்க்கவி சரிதம் இரண்டாவதாயும் வரும். பர்த்துருஹரி இயற்றினோர் சென்னை கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப்பண்டிதர், ம-ா-ா-ஸ்ரீ கா. கோபாலாசாரியர் அவர்கள். தமிழ்க்கவி சரிதம் இயற்றினோர் சென்னை பிரெஸிடென்ஸி காலேஜ் புரொபஸர் ம-ா-ா-ஸ்ரீ, **தி. மி. சேஷகிரிசாஸ்திரியாரவர்கள்.**

---